# செய்திக்கலவை

தமிழ்மாத இதழ்

# SEITHI KALAVAI

TAMIL MAGAZINE


பிப்ரவரி: 2021 செய்தி :06 கலவை :12 விலை ரூ.15/- வருட சந்தா ரூ. 180/–

February : 2021 Issue : 06 Volume: 12 Rs.:15/- Annual Subscription Rs. 180




மோடி என்ன செய்தார்..?

என்னுள் நான்



டாக்டர். இரா. சிவக்குமார் ஐ.பி.எஸ்.

கண்காணிப்பாளர்

மதுவிலக்கு அமலாக்கம்

சேலம் மண்டலம்

சுபாஸ் சந்திரபோஸின் காதல்





மேன்மக்கள் மாண்பு



யார் இந்த பாஷ்யம்?



தோள் சீலைப் புரட்சி

புதியதோர் பாதை அமைப்போம்!!

ஓர் புதிய பார்வை...


காதல்! காதல் !! காதல்!!!
காதல் போயின் சாதல்
என்றான் பாரதி
தாய் தந்தையர்
உடன் பிறந்தோர்
கூடி உள்ள உறவு நட்பு
தன்னோடு இணைந்தாள்
தன் பிரதிபலிப்பான மழலை
இன்னும் அண்டத்தின் பிற
உயிர்கள் மீதும்
கொண்ட மாசற்ற "அன்பே"
உண்மைக் காதல்-
அக்காதல் இல்லையேல்
சாதல் நன்றே.
அனைவரும் இனிய
காதலர் தின
நல்வாழ்த்துக்கள்
இவன்
செய்திக்கலவை குழுமத்தார்

# மோடி என்ன செய்தார்..?



நரேந்திர மோடி அதை விற்றார். இதை விற்றார் என ஆரம்பித்து விட்டது ஒரு கோஷ்டி, அவர் என்ன கச்சத்தீவினை ஒரு யானை குட்டிக்கு விற்றாரா? இல்லை லடாக்கின் அந்தப் பக்கம் காசு வாங்காமல் பல்லாயிரம் ஏக்கரை விற்றாரா? எனக் கேட்டால் பதில் வராது, இங்கு எதுவும் விற்கப்படுவதில்லை, இந்திய சட்டப்படி அது முடியவும் முடியாது, இங்கு செய்யப்படுவது எல்லோரும் தொழில் தொடங்க ஒரு வாய்ப்பு. தனியார் மயமெல்லாம் தவறு என்றால் அரசியல்வாதிகளின் குடும்பம் பள்ளி நடத்துவது ஏன்? தனியார் மருத்துவமனைகளும். பொறியியல் கல்லூரிகளும் ஏன்? தனியார் போக்குவரத்து கழகங்களெல்லாம் ஏன்? பெருகிவிட்ட மக்கள் தொகையில் எல்லோருக்கும் வேலை கொடுக்கவும், அரசுக்கு வரிகள் வரவும் தொழில்கள் அவசியம் அது பெருகினாலன்றி இங்கு வாய்ப்புகள் பெருகாது,



கம்யூனிச சோவியத் யூனியனில் முன்பு எல்லாமே அரசுத் தொழில்களாக இருந்தது, அதற்கேற்ப சலுகைகளும் இன்னும் பலவும் இருந்தன, ஒரு கட்டத்தில் அவர்களுக்கு உண்மை புலப்பட்டது, ஆட்சி வேறு. தொழில் வாய்ப்புகள் என்பது வேறு, அரசு தொழில் வாய்ப்புகளைப் பெருக்கி வருமானத்தை உயர்த்த வேண்டுமே தவிர. அரசே எல்லாவற்றையும் கட்டி மேய்ப்பது என்பது பல அசவுகரியங்களைக் கொடுக்கும், உலகளாவிய போட்டிகள் அங்கு ஓட வேண்டிய வேகம். சந்தைகளை தக்க வைத்தல் எல்லாவற்றிற்கும் மேல் அதிக உற்பத்தி செய்ய முடியாமல் அரசு தொழிற்சாலைகளை கட்டி வைக்கும் தொழிற்சங்கம். யூனியன் அவர்களுக்கான உரிமைகள் என சிக்கல் ஏராளம், அரசிற்கு தேவை வரி, பின் என்ன மண்ணாங் கட்டிக்கு எல்லாத் தேரையும் அரசே இழுக்க வேண்டும் எனச் சொல்லி கொள்கையே மாற்றினார்கள், சோவியத்தே சிதறியது ஆம், எல்லாம் அரசே நிர்வகிக்கலாம் என்பது தான் சோவியத் அமையவும் வீழவும் வழி செய்தது, தொழிலைத் தொழிலாக நடத்த வேண்டும் மாறாக வாயில் ஊட்டி தொழிலாளியை தாலாட்டிக்கொண்டிருந்தால் ஒரு மண்ணும் உருப்படாது, ரஷ்யா இதில் தான் கம்யூனிசத்தைப் புதைத்தது, சீனா கம்யூனிசக் கொள்கை அரசுக்கு சரி. ஆனால், தொழிலுக்கு சரி அல்ல என தொழிற்சங்கம் இத்யாதிகளுக்கு அனுமதி மறுத்தது, இந்த மனித உரிமை. தொழிற்சங்கம். போனஸ் இதெல்லாம் அங்கு மாபெரும் கெட்ட வார்த்தைகள், தேச விரோத உச்சரிப்பு, இதில் தான் சீனா உலகை மிரட்டும் அளவிற்கு வளர்ந்தது, இதை அவர்கள் செய்தால் சீர்திருத்தம். இந்தியா செய்தால் விற்பனை, இங்கு உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப எல்லோரையும் தொழில் தொடங்க அரசு ஊக்குவிக்கின்றது, இதனால், இரு விஷயம் சாத்தியம் முதல் மக்களுக்கு எளிதான சேவைகள் குறைந்த விலையில் சவுகரியமாகக் கிடைக்கும் தரமும் உயர்தரமானவை, இதனால், அரசிற்கு


அதானி


அம்பானி



கலாநிதி


கொட்டும் வரியும். மக்களுக்கு கிடைக்கும் வேலை வாய்ப்பும் ஏராளம்,

இரண்டாவது அரசுத் தொழில் அலட்சியம் அதிகம், ஏர் இந்தியா முதல் எல்லாமும் நாசமாய் போக அவர்களின் தொழிலாளர் கொள்கையும். சலுகையும் இன்னும் பல கொடுமைகளும் முதன்மையானவை, இந்தியா வளரும் நாடு. ஏராளமான மக்கள் தொகையினை கொண்டிருக்கும் நாடு, இங்கு மக்கள் அனைவருக்கும் தொழில் வேண்டும் நாட்டிற்கு வரி பெருக வேண்டும் அதற்கு ஏகப்பட்ட தொழில்கள் வேண்டும், இதனாலே யார் வந்தாலும் தொழில் தொடங்குங்கள் வேலை வாய்ப்பைப் பெருக்குங்கள் என அனுமதிக்கின்றது அரசு, இதில் என்ன தவறு என்பது தான் தெரியவில்லை, தமிழகத்தில் தனியார் பள்ளி பெருக காரணம் என்ன? அரசு ஆசிரியருக்கு கொடுக்கப்படும் சுகமான சலுகை. சங்கம் இன்னபிறசலுகைகளும் அதில் கைவைக்க முடியா அரசின் தயக்கமும் அடிப்படையில் தனியார் ஆசிரியர்களும். அரசுப் பள்ளி ஆசிரியர்களும் பணியால் ஒன்று ஆனால் வருமானமும் வேலைப் பாதுகாப்பும் எங்கே உண்டு? இதில்தான் அரசின் பணம் பாழாகின்றது. வேறு வழியின்றி அள்ளிக் கொடுக்க வேண்டியிருக்கிறது, இதில் சிந்திக்க வேண்டியிருக்கிறது,

இன்று இந்தியாவிற்கு வேலை வாய்ப்பை கொடுக்கும் ஐ,டி தொழில் முதல் இன்னும் பலவும் பலருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க காரணமே கடுமையான நிர்வாகக் கட்டுப்பாடு


மன்மோகன்சிங்


ராஜீவ்காந்தி


சஞ்சய்காந்தி

ஒவ்வொரு தொழிலும் எளிதில் வளருவது அல்ல, ஒவ்வொரு நிறுவனமும் வளர படும்பாடு கொஞ்சமல்ல, அம்பானியோ இல்லை அதானியோ. தமிழ்நாட்டு கலாநிதியோ பல்லாயிரம் கோடிகளைத் தூக்கிக்கொண்டு செவ்வாய் கிரகத்தை வாங்கி அங்கு செட்டில் ஆக முடியாது. அது பண சுழற்சி. பல்லாயிரம் பேருக்கான வாய்ப்பு. அரசிற்கு கொட்டும் பல்லாயிரம் கோடி வரி. அந்த வரிதான் அரசு நல் திட்டமாக மக்களுக்கே திரும்ப வரும், இதைத்தான் நாட்டை விற்றார் மோடி என கிளம்புகின்றன, அரசியல் ஆதாயம் தேடும் கூட்டங்கள், மாருதி காருக்காக மாபெரும் கலவரம் நடத்தினாரே சஞ்சய் காந்தி. அது தேச விற்பனையா? இந்தியாவினை தொழில் வளமாக்குவேன் என யூனியன் கார்பைடு கம்பெனியினை போபாலில் நிறுவினாரே ராஜிவ் காந்தி அது என்ன விற்பனையா? வங்கிகள் எளிய மக்களுக்கான கடனை வழங்க மறுக்கின்றன என அவைகளை தேச உடைமை ஆக்கினாரே இந்திரா காந்தி. அது என்ன தேச விற்பனையா? யாரும் எந்தப் பொருளையும் இங்கு விற்கலாம். அரசிற்கு வரி கட்டினால் போதும் என இந்தியாவினை திறந்து விட்ட மன்மோகன்சிங் செய்தது விற்பனையா? அல்ல. அது தேசத்திற்கான சேவை, தொழில் பெருகி வேலை பெருகி அரசிற்கும் வரி பெருக்குவது தேச நிர்வாகம் இது மன்னர் காலம் முதல் மக்கள் ஆட்சி நடக்கும் இக்காலம் வரை நடக்கின்றது

SEITHIKALAVAI TAMIL NADU INDIA

இன்னும் நடக்கும், உண்மையில் நாட்டுச் சொத்தினை விற்பது என்றால் என்ன தெரியுமா? கள்ளச் சாராயம் விற்கும் ஒரு சட்ட விரோத தொழிலை அரசே செய்ய வேண்டும், அதை காய்ச்சும் கம்பெனிகளை தனது கட்சிக்காரர்களுக்கே கொடுத்து அந்த கட்சிக்கு பணம் வருமாறு செய்வது, பத்திரிக்கை. டிவி. முதல் விமானக் கம்பெனி. கொரியர் வரை தன் குடும்பத்திற்கு ஒதுக்க வேண்டும், சேது சமுத்திர கப்பல் வரி கூட தன் குடும்பத்திற்கு வர வேண்டும் என அலைவது இதைப்பற்றி எல்லாம் யாரும் பேசுவதாக தெரியவில்லை, இந்த தனியார் மயம் அரசுடைமை பற்றி ஒரு விஷயம் பார்வைக்கு...



கலைஞர்

1960களில் தனியார் போக்குவரத்துகள் தான் ஆதிக்கம் செலுத்தின, டி,வி,சுந்தரம் அய்யங்காரும். நாகர் கோவில் பயோனியரும் அதில் முக்கியமானவர்கள், இதில் பார்ப்பனர் என்பதால் சுந்தரம் அய்யங்காரையும். திமுகவிற்கு எதிரான பகுதி என்பதால் பயோனியரையும் குறி வைத்தார் கலைஞர், ஒரே இரவில் தனியார் போக்குவரத்து அரசுடைமையாக்கப்பட்டு எல்லாவற்றிலும் திருக்குறள் எழுதப்பட்டது, அன்றைய முதல்வரின் தனிகுறளும் எழுதப்பட்டது, பின் தொழிற் சங்கம் யூனியன் என என்னவெல்லாமோ வந்தன, என்னாயிற்று? அதுவரை மிகச் சரியாக இருந்த போக்குவரத்து மெல்ல. மெல்ல தேய்ந்தது, கலைஞர் என்னதான் சாகசம் காட்டினாலும் ஒன்றும் தேறவில்லை, சிக்கல் மேல் சிக்கல் வந்தது, அரசால் முடியவில்லை, மெல்ல மறுபடியும் போக்குவரத்தை தனியார் மயப்படுத்தினார் கலைஞர், அதில் முக்கால்வாசிப் பேருந்துகள் அவரின் கட்சிக்காரர்களின் சார்பில் ஓடிக்கொண்டிருக்கின்றன மினிபஸ் உள்பட.



டி.வி.எஸ்.ஐயங்கார்



பயோனியர்

அரசுப்போக்குவரத்து கொரோனா கண்ட நோயாளி போல் இழுத்துக் கொண்டிருக்கிறது, இதுதான் அரசு தொழில் நடத்துவதற்கும். தனியார் நடத்துவதற்கும் உள்ள வேறுபாடு, தமிழகத்தில் ஓடும் பேருந்துகளையே பாருங்கள் அதில் ஆயிரம் உண்மைகள் விளங்கும், தனியார் சேவைகள் வர வரத்தான் தொலைபேசி கட்டணம் முதல் விமானப் பயணம் வரை விலை வீழ்ந்தது, கார்களின் விலை சரிந்தது, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் அளவு பல விஷயங்கள் சந்தைக்கு போட்டியில் குவிந்தன, மறுக்க முடியுமா? வேலை பார்ப்பது தனியார் அலுவலகத்தில். வாங்கும் பொருட்கள் எல்லாம் தனியார் கடை. இன்னும் மருத்துவம். பள்ளி. கல்வி. டிவி. போன். கார். பெட்ரோல் நிலையம் என எல்லாமே தனியார் மயம், பார்க்கும் சினிமா தியேட்டர் உள்பட தனியார் மயம், ஏன் சோறு போடும் விவசாயமே தனியார் தான், ஆனால், அதையே அரசு ஊக்குவித்தால் “நாடு விற்பனை” என ஒப்பாரி, ஏன் இந்த முரண்பாடுகள் அரசியலுக்கா? இல்லை ஆதாயத்திற்கா? நம் நாட்டில் வளம் இருந்தால் தான் வலிமை கிடைக்கும். வலிமை கிடைத்தால்தான் நல்ல வல்லரசாக விளங்க முடியும் என்பதை இந்திய தேசத்தின் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஒரு கணம் சிந்தித்தால், தெளிவு நிலை பிறக்கும்-வழிமுறைகளும் கிடைக்கும் என்பதே எம்முடைய வேண்டுகோள்.



# மேன்மக்கள் மாண்பு

அந்த அதிகாலைக் குளிர் நேரத்தில் சுறுசுறுப்பாக தன் அறையை விட்டு புறப்பட்டு வெளியே வந்தார் அப்துல்கலாம், வெளியே அவருக்காக காத்திருந்த அதிகாரிகளைப் பார்த்து ஒரு வெள்ளந்திப் புன்னகை. தமிழ் நாட்டில் உள்ள குன்னூரில் நடைபெற்றஅரசு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக அங்கே வந்திருந்தார் கலாம், ஜனாதிபதியாக அவர் இருந்தபோது நடந்த சம்பவம் இது, நான் தயாராக இருக்கிறேன், நிகழ்ச்சிக்கு நாம் புறப்படலாமா? என சிரித்தபடி தன் அருகிலிருந்த அதிகாரிகளிடம் கேட்டார் அப்துல் கலாம், அப்போது அவரை நெருங்கி வந்த ஒரு முக்கிய அதிகாரி ஏதோ ஒரு விஷயத்தை கலாம் காதருகில் சென்று சொல்ல அதைக் கேள்விப்பட்டவுடன் அவர் முகத்திலிருந்த புன்னகை மாறி சற்றே பதட்டமானார், அருகில் நின்றிருந்த மற்றஅதிகாரிகளைப் பார்த்து சற்று இறுகிய முகத்துடன் கேட்டார், “இதை ஏன் முதலிலேயே என்னிடம் சொல்லவில்லை” இதை எதிர்பார்த்திராத அதிகாரிகள் என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமைதியாக நின்றிருந்தார்கள், எவ்வளவு முக்கியமான விஷயம் இது? என்றார் கலாம், அது இதுதான், முன்னாள் இராணுவத் தளபதி *பீல்ட் மார்ஷல் மானேக்ஷா உடல் நலம் சரியில்லாமல் குன்னூரில் உள்ள ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருக்கிறாராம், உடல்நிலை சீராக இல்லாத காரணத்தால் படுத்தப் படுக்கையாக இருக்கிறாராம், “யார் இந்த மானேக்ஷா” எனக் கேட்பவர்களுக்கு 1971ல் இந்திரா காந்தி ஆட்சி காலத்தில்



மானேக்ஷா–அப்துல்கலாம்

இந்தியாவிற்கும். பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த போரில் வெறும் பதிமூன்று நாட்களில் பாகிஸ்தானைத் தோற்கடித்து சரணடைய வைத்த மாபெரும் சாதனையைச் செய்த ராணுவத் தளபதி தான் இந்த ”பீல்ட் மார்ஷல் மானேக்ஷா”,

பல ஆண்டு காலமாக இந்திய ராணுவத்தில் சேவைகள் பல செய்து விருதுகள் பல பெற்ற பெருமைக்குரியவர், அவர் குன்னூர் ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் தான் பதட்டமாகிப் போனார் கலாம், “இப்போதே நான் அந்த மருத்துவமனைக்குச் சென்று உடனடியாக மானேக்ஷாவை பார்த்தாக வேண்டும், அதற்குப் பின் நமது மற்ற நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்ளலாம் என்றார், ஆடிப்போனார்கள் அதிகாரிகள், ஏனெனில் ஒரு ஜனாதிபதியின் பயணத்திட்டத்தை அவ்வளவு சுலபமாக நினைத்தபடி எல்லாம் மாற்றிவிட முடியாது, ஆனால் இதை எப்படி

SEITHIKALAI TAMILNADU

அப்துல் கலாமிடம் எடுத்துச் சொல்வது? இதற்குள் பொறுமையிழந்த அப்துல் கலாம். தனது வாகனத்தை தன் அருகில் வரும்படி சைகை செய்ய. வேறு வழியின்றி அப்துல் கலாம் விருப்பப்படியே அவரை அழைத்துக் கொண்டு மருத்துவ மனையை நோக்கி விரைந்தார்கள் அதிகாரிகள், மருத்துவ மனைக்குள் பரபரப்பாக அப்துல் கலாம் நுழைவதைப் பார்த்ததும் படுக்கையில் படுத்திருந்த மானேக்ஷா திகைத்துப் போனார், தன்னைப் பார்ப்பதற்காகவே இந்திய ஜனாதிபதி அங்கு வந்திருக்கிறார் என்பது தெரிந்ததும் நெஞ்சம் நெகிழ்ந்து போனார், இதை அவர் கொஞ்சம் கூட எதிர்ப்பார்க்கவில்லை, "எப்படி இருக்கிறீர்கள்" அன்பான புன்சிரிப்போடு கேட்ட அப்துல் கலாம் ஆதரவோடு மானேக்ஷாவின் அருகில் வந்து அவர் கரங்களைப் பற்றிக் கொண்டார், சுமார் பதினைந்து நிமிடங்கள்


ராணுவ உடையில் மானேக்ஷா

இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள், மகிழ்ச்சி பொங்கி வழியும் முகத்துடன் மானேக்ஷா சொன்னார் இவ்வளவு தூரம் சிரமம் எடுத்து என்னைப் பார்க்க வந்ததற்கு மிக்க நன்றி, "அது என்னுடைய கடமை" சரி உடல் நலனை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள் நான் போய் வருகிறேன் என்று கூறி புறப்படத் தயாரானார் அப்துல் கலாம், அதற்கு முன் ஒரு முக்கியமான கேள்வி திடீரென கலாம் இப்படிக் கேட்டவுடன் என்ன என்பது போல் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தார் மானேக்ஷா, "உங்களுக்கு இங்கு வழங்கப்படும் வசதிகள் எல்லாம் சவுகரியமாக இருக்கிறதா? ஒரு வேளை ஏதாவது மனக்குறைகள் இருந்தால் என்னிடம் சொல்லுங்கள், நான் அதை உடனே சரி செய்து தரச் சொல்கிறேன்" அப்துல் கலாம் இப்படிக் கேட்டவுடன் மானேக்ஷா முகம் கொஞ்சம் மாறியது அதைப் புரிந்து கொண்ட கலாம் "சொல்லுங்கள்" உங்களுக்கு ஏதோ ஒரு மிகப்பெரும் மனக்குறைஇருப்பதை உங்கள் முகம் தெளிவாகக் காட்டுகிறது, எதுவாக இருந்தாலும் தயவு செய்து அதை என்னிடம் சொல்லுங்கள், மானேக்ஷா கண்கள் கலங்க அப்துல் கலாம் முகத்தையே உற்றுப் பார்த்தார்,

அதன் பின் குரல் தழுதழுக்க இப்படிச் சொன்னார் "வேறொன்றுமில்லை நான் எனது உயிரைவிட அதிகமாக நேசிக்கும் இந்த நாட்டின் மிக உயர்ந்த பதவியில் இருக்கும் ஜனாதிபதியாகிய நீங்கள் என்னை சந்திக்க இங்கே வந்திருக்கிறீர்கள், ஆனால் அந்த ஜனாதிபதியே என்னை சந்திக்க வந்திருக்கும் நேரத்தில் கம்பீரமாக எழுந்து நின்று சல்யூட் செய்ய வேண்டிய நான். அப்படி செய்ய முடியாத நிலையில் இப்படி இங்குப் படுத்திருக்கிறேனே" இது ஒன்று தான் எனக்கு இருக்கும் ஒரே ஒரு மிகப் பெரிய மனக் குறை, இப்படிச் சொல்லிவிட்டு வழியும் கண்ணீரைத் துடைக்க கூடத் தோன்றாமல் படுத்திருந்தார் மானேக்ஷா, அருகில் வந்து அவர் கைகளை ஆதரவோடு பற்றிக் கொண்டார் அப்துல்கலாம், ஆனால் அவர் கண்களும் கூட அவரையும் அறியாமல் கண்ணீரால் நிரம்பியிருந்தது, இருவர் கண்களில் இருந்தும் வழிந்த அந்தக் கண்ணீர் இந்தியத் தாயின் பாதங்களை நனைத்தது, தன்னையும் அறியாமல் மெய் சிர்த்தாள் பாரதத்தாய், எப்போதும் மேன் மக்கள். மேன்மக்களே!

பண்டிட் கே. கிருஷ்ணமூர்த்தி

# சுபாஸ் சந்திரபோஸின் காதல்

ஒத்துழையாமை இயக்கத்தின் செயல்பாட்டின்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போஸின் உடல் நிலை 1932ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மோசமான நிலைக்கு சென்றது, எனவே. போஸ் குடும்பத்தின் கோரிக்கையை ஏற்றஅப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை மேல் சிகிச்சைக்காக ஐரோப்பாவிற்கு அழைத்து செல்ல அனுமதித்தது, வியன்னாவில் சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்த போதிலும் ஐரோப்பாவில் உள்ள இந்திய மாணவர்களை ஒன்றிணைந்து சுதந்திரத்திற்காக போராடுவதற்கு அவர் முடிவு செய்தார், அதே சமயத்தில் போஸை அணுகிய ஐரோப்பிய பதிப்பாளர் ஒருவர் “இந்தியாவின் துயரம்” என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதுவதற்கு பணித்தார், அதை ஏற்றுக் கொண்ட போஸ் இந்த புத்தகத்தை உடனிருந்து எழுதுவதற்கு உதவியாகவும். அதை ஆங்கிலத்தில் தட்டச்சு செய்வதற்கும் ஒரு உதவியாளரை தேர்ந்தெடுப்பதற்கு முடிவு செய்தார்,


சுபாஸ் சந்திரபோஸ்

போஸின் நண்பரான டாக்டர் மாத்தூர் என்பவர் இதற்காக இரண்டு நபர்களை பரிந்துரைத்தார், அதிலுள்ள முதல் நபரை அழைத்து நேர்காணல் செய்த போஸிற்கு திருப்தியில்லை, எனவே. இரண்டாவதாக இருபத்தி மூன்று வயதான எமிலிசென்கல் என்ற பெண் நேர்காணலுக்காக அழைக்கப்பட்டார், எமிலியின் பேச்சில் நம்பிக்கை கொண்ட போஸ் அவரை 1934ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் பணியில் சேர்த்துக் கொண்டார் 1934 ஆம் ஆண்டு இந்த சந்திப்பு நடப்பதற்கு முன்பு வரை முப்பத்தியேழு வயதான சுபாஷ் சந்திரபோஸின் முழு கவனமும் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டிருந்து இந்தியாவை விடுவிப்பதிலேயே இருந்தது, அதுவரை எமிலி என்பவர் தனது வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறார் என்பதை அறியாமல் இருந்தார் போஸ், சுபாஸ் சந்திரபோஸின் இளைய சகோதரரான சரத் சந்திரபோஸின் பேரனான சுகித் போஸ் அவரது “மாட்சிமை பொருந்திய நியமனம்” – சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் பேரரசுக்கு எதிரான இந்தியாவின் போராட்டம் என்ற தலைப்பில் புத்தகமொன்றை எழுதியுள்ளார், அதில் எமிலியை சந்தித்த பிறகு போஸின் வாழ்க்கை தலைகீழாக மாற்றமடைந்தது என்று குறிப்பிட்டுள்ளார், சுபாஸ்


சுபாஸ் சந்திரபோஸின் குடும்பம்

SETHIKALAVAI TAMIL NADU INDIA


மனைவி எமிலி – மகள் அனிதா

சந்திரபோஸிற்கு பல காதல் விருப்பங்களும். திருமணத்திற்கான பல வாய்ப்புகளையும் கொண்டிருந்தார், ஆனால். அவர் யாரையும் ஆர்வமாக ஏற்றுக்கொள்ள வில்லை, ஆனால், எமிலியின் அழகு அவரை கவர்ந்துவிட்டது என்று அப்புத்தகத்தில் சுகித்போஸ் குறிப்பிட்டுள்ளார்,

சுபாஸ் சந்திரபோஸே காதலை வெளிப்படுத்தியதாகவும் அவர் 1934ம் ஆண்டின் இடைப்பகுதியிருந்து 1936ம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவேக்கியாவில் தங்கியிருந்த கால கட்டத்தில் அவர்களின் காதல் சிறப்பான நிலையை அடைந்தது என்றும் அப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது, சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் வாழ்க்கையை ஒப்பிட்டு புகழ்பெற்ற கல்வியாளரான ருத்ரநாஷீ முகர்ஜி ஒரு புத்தகம் எழுதினார், பென்குயின் பதிப்பகம் வெளியிட்ட அப்புத்தகத்தில் போஸ் மற்றும் நேருவின் வாழ்க்கையில் அவர்களின் மனைவிகள் ஏற்படுத்திய தாக்கம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது, தங்கள் காதலின் தொடக்க கட்டத்திலேயே இது மிகவும் வேறுபட்ட ஒன்று, கடினமான ஒன்று என்றும் அவர்கள் அறிந்திருந்தனர் என்பது அவர்கள் இருவரும் எழுதிக் கொண்ட கடிதத்திருந்து தெரிய வருகிறது, எமிலி அவரை திருமதி,சென்கல் அல்லது ஷெல்லி என்று அழைத்தார் என்று அப்புத்தகத்தில் முகர்ஜி குறிப்பிட்டுள்ளார், இந்த கடிதங்கள் முன்னர் சுபாஷ் சந்திரபோஸால் எமிலிக்கு எழுதப்பட்ட கடிதங்களின் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை,


மகள் அனிதா – எமிலி

இந்தக் கடிதங்களை சரத் சந்திரபோஸின் மகனான சிசிர்போசின் மனைவியான கிருஷ்ணா போஸிடம் எமிலியே நேரடியாக அளித்தவையாகும், 1936ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் தேதி எழுதப்பட்டுள்ள கடிதமொன்று இவ்வாறு தொடங்குகிறது, 'என் அன்பே தக்க நேரம் வரும்போது உறைந்த பனி உருக ஆரம்பிக்கிறது, ஆனால் இம்முறைஎனது இதயம் உருகுவதைப் போன்று உணருகிறேன், நான் உன்னை எவ்வளவு விரும்புகிறேன் என்பதை உனக்கு கடிதங்கள் மூலமாக தெரிவிப்பதை நாம் நேரில் உரையாடியதைப் போல என்றால் கட்டுப்படுத்த இயலவில்லை, என் அன்பே எனது இதயத்தின் ராணி நீ தான், ஆனால் நீ என்னை விரும்புகிறாயா? எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரியவில்லை, ஒரு வேளை நான் எனது மீதி வாழ்க்கையை சிறையில் செலவிட நேரிடலாம், நான் சுட்டுக் கொல்லப்படலாம் அல்லது தூக்கில் தொங்கவிடப்படலாம், அதனால் நான் உன்னை நேரில் சந்திக்க முடியாமல் போக நேரிடலாம், அல்லது மீண்டும் கடிதத்தை

SETHIKALAVAI TAMILNADU INDIA

எழுத முடியாமலும் போகலாம், இருப்பினும் நீ எப்போதுமே எனது இதயத்திலும். எண்ணத்திலும். கனவிலும் நிறைந்திருப்பாய், இந்த ஜென்மத்தில் நாம் இருவரும் ஒன்றாக சேர்ந்து வாழ முடியாவிட்டாலும் அடுத்த ஜென்மத்தில் உன்னுடன் தான் இருப்பேன்" என்று சுபாஷ் சந்திரபோஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்,

அந்தக் கடிதத்தின் கடைசியில் "நான் உன்னுள் இருக்கும் பெண்ணையும். ஆன்மாவையும் காதக்கிறேன், நான் நேசிக்கும் முதல் பெண்மணி நீ தான்" என்று போஸ் குறிப்பிட்டுள்ளார், மேலும் இதை படித்ததும் கடிதத்தை அழித்து விடுமாறு எமிலியிடம் கோரிக்கை விடுத்திருந்தார், ஆனால் எமிலி அதை பாதுகாப்பாக சேகரித்து வைத்துக் கொண்டார், எமிலி மீதான காதல் சுபாஷ் சந்திரபோஸ் தன்னை முழுவதுமாக இழந்து விட்டார், இது குறித்து சுகித்திடம் பேசிய போஸின் நெருங்கிய நண்பரும் அரசியல் கூட்டாளியுமான ஏ,சி,என்,நம்பியார். சுபாஷ் ஒரு யோசனையுடன் இருந்தவர் இந்தியாவின் சுதந்திரத்தை பெறுவதில் மட்டுமே அவரது கவனம் இருந்தது, போஸின் அந்த எண்ணத்திருந்து திசை திரும்புவதற்கு ஒரு ஒரு வாய்ப்பு அவர் எமிலியை நேசிக்கும் போது தான் ஏற்பட்டது, அவர் எமிலியை மிகவும் விரும்பினார்,



போஸ் எமிலி– கிருஷ்ணா போஸ் சிசிர் போஸ்

அதற்கடுத்த முறைசந்திக்கும்போது போசும் எமிலியும் திருமணம் செய்து கொண்டனர், தனக்கு இருபத்தியேழு வயதிருக்கும்போது 1937ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் நாள் தங்களது திருமணம் நடைபெற்றதாக கிருஷ்ணா போஸிடம் பேசிய எமிலி தெரிவித்திருந்தார், அவர்கள் தங்கள் இருவருக்கும் விருப்பமான ஆஸ்திரியாவிலுள்ள இடத்தில் திருமணம் செய்து கொண்டனர், ஆனால் இருவரும் தங்களது திருமணம் பற்றிய தகவலை ரகசியமாக வைத்துக் கொள்ள முடிவு செய்தனர், எமிலி தங்களது திருமணத்தை தவிர வேறெந்த தகவலையும் கிருஷ்ணாவிடம் பகிர்ந்துகொள்ளவில்லை, தனது அரசியல் வாழ்க்கையில் எவ்வித தாக்கத்தையும் சந்திக்க விரும்பாத காரணத்தினால் போஸ் தனது திருமண வாழ்க்கையை மறைத்திருக்கலாம் என்று முகர்ஜி நினைக்கிறார், வெளிநாட்டுப் பெண்ணை போஸ் திருமணம் செய்து கொண்டது அவரைப் பற்றிய மற்றவர்களின் பார்வையை மாற்றியிருக்கலாம்,

இந்தியாவிலுள்ள சில செய்தி தாள்களுக்கும். இதழ்களுக்கும் வியன்னாவில் இருந்தபடியே எமிலி எழுத வேண்டுமென்று போஸ் விரும்பியதாக கிருஷ்ணா போஸ் கூறுகிறார், தி இந்து. மாடர்ன் ரிவ்யூ ஆகிய பத்திரிக்கைகளுக்கு எழுதியிருந்தாலும் அக்கட்டுரைகள் தனக்கு திருப்தி

SETHIKALAVAI TAMILNADU INDIA

அளிக்கவில்லை என்று போஸ் பலமுறை கூறியதாக தெரிகிறது, 1937ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பனிரெண்டாம் தேதி எமிலிக்கு சுபாஷ் எழுதிய கடிதத்தில் இந்தியாவைப் பற்றி சில கட்டுரைகளை நீ எழுதியுள்ளாய், ஆனால் இந்த புத்தகங்களை உனக்கு வழங்குவதற்கு தேவையுள்ளதென்று நான் நினைக்கவில்லை, ஏனென்றால் நீ அவற்றைப் படிப்பதேயில்லை என குறிப்பிட்டுள்ளார், நீ தீவிரமாக இருக்காத வரை. வாசிப்பதில் ஆர்வம் வராது, வியன்னாவில் நீ பல தலைப்பிலான நூல்களைப் பெற்றிருக்கிறாய், ஆனால் அவற்றை நீ தொடர்ந்து பார்க்கவில்லை என்று எனக்குத் தெரியும், இருவரின் அன்பின் விளைவாக 1942ம் ஆண்டு நவம்பர் 29ல் இவர்களின் மகளான அனிதா பிறந்தநாள், இத்தாயின் புரட்சிகர தலைவர் கரிபால்டியின் மனைவியான பிரேசிலை பூர்விகமாக கொண்ட அனிதா கரிபால்டி நினைவாக அந்தப் பெயரிடப்பட்டது,

அனிதா தனது கணவருடன் பல போர்களில் ஈடுபட்டிருந்ததுடன் துணிச்சலான வீரர் என்ற அடையாளத்தை பெற்று விளங்கினார், சுபாஸ் சந்திர போஸ் 1942ம் ஆண்டு டிசம்பர் மாதம் வியன்னாவிற்கு சென்று எமிலியையும். அனிதாவையும் சந்தித்ததே அவர்களின் கடைசி சந்திப்பாகும், ஆனால் சுபாஷ் சந்திரபோஸின் நினைவுகளுடன் 1996ம் ஆண்டு வரை வாழ்ந்த எமிலி தங்களது மகள் அனிதா போஸை ஜெர்மனியிலுள்ள பிரபலமான பொருளாதார வல்லுனராக வளர்த்தெடுத்தார்,



இந்த கடினமான பயணத்திலும் சுபாஷ் சந்திரபோஸின் குடும்பத்திருந்து எந்த உதவியும் பெறுவதற்கு அவர் மறுப்பு தெரிவித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது,

எஸ்.ஆர்.பி. ராஜா

**செய்திக் கலவை** மாத இதழ்



**வண்ணத்தில்:**

| | | | |
|---|---|---|---|
| பின்பக்க அட்டை | : | ரூ. | 15,000 |
| நடுப்பக்கம் (2) | : | ரூ. | 20,000 |
| உள்பக்க முன் அட்டை | : | ரூ. | 10,000 |
| உள்பக்க பின் அட்டை | : | ரூ. | 8,000 |

**கருப்பு வெள்ளையில்**

| | | | |
|---|---|---|---|
| உள் முழுப்பக்கம் | : | ரூ. | 5,000 |
| நடுப்பக்கம் (2) | : | ரூ. | 10,000 |
| உள் அரைப்பக்கம் | : | ரூ. | 3,000 |

**விளம்பரத் தொடர்புகளுக்கு :**
53, வ.உ.சி. காலனி, சிட்கோ அஞ்சல்,
எல்.ஐ.சி. காலனி அருகில், கோவை–21
செல் : **9487409748**

**வாசகர்களின் கவனத்திற்கு**

**செய்திக் கலவை** மாத இதழுக்குச் செய்திகள் அனுப்புவோர் வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். செய்திக்கு உரிய புகைப்படங்கள் இருப்பின் அவற்றின் பின்பக்கம் சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டு எழுத வேண்டும். தேவை ஏற்படின் தங்களைப் பற்றிய விவரம் பாதுகாக்கப்படும். செய்திகளைச் சுருக்கவும், திருத்தம் செய்யவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. செய்திகளைப் பிரதி மாதம் 25 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு:9894609748



# கர்மா வலியது

மறைந்த பிரதமர் இந்திராவால் சஞ்சய் காந்தி அரசியல் வாதியாகப் பயிற்சி பெற்றார், ராஜீவ் காந்தி விமானியாகப் பயிற்சி பெற்றார், ஆனால் ராஜீவ் காந்தி அரசியல் வாதி ஆனார், சஞ்சய் காந்தி விமான விபத்தில் மாண்டார், தி,மு,க வை அண்ணாவோடு இணைந்து எம்,ஜி,ஆர் வளர்த்தார், திமுகவை ஆட்சி பெறச் செய்தார், பிறகு கருணாநிதியை தன் முழு முயற்சியுடன் முதல்வராக நியமித்தவர் எம்,ஜி,ஆர் மட்டுமே, ஆனால் எம்.ஜிஆரையே தீட்டிய மரத்திலேயே கூர்பாய்வது போல் செய்தார் கருணாநிதி, அதனாலேயே எம்,ஜி,ஆர் நடிப்பதை தியாகம் செய்து அரசியலை முதன்மைப்படுத்தினார். முதல்வரானார்,


ஸ்டாலினும். சசிகலாவும் முப்பது வருடமாக முதல்வர் கனவில் இருந்தாங்க. ஆனால். ஓ,பி,எஸ். ஈ,பி,எஸ் முதல்வர்கள் ஆகி பிரபலமானார்கள், எம், ஜி, ஆர். அண்ணாதுரை. காமராஜர் எதிர்பாராத நிலையில் மரணித்தார்கள், பிரபலமாக இருக்கும் போதே. ராஜீவும். பிரபாகரனும் தங்களின் பிரபல்யம் சறுக்கும் போது மரணித்தார்கள், அதுவும் வேறொருவரால் கொல்லப்பட்டார்கள், ஈவேரா விநாயகர் சிலையை கல் என கூறி தூக்கி எறிந்தார் ஆனால், தனது சிறுநீரகத்தில் உருவானக் கல்லைக்கூட தூக்கி எறிய முடியாமல் மூத்திர வாளியோடு சுற்றித் திரிந்தார், ஜெயலலிதா சிறைக்கு போகனும் என கலைஞரும்-கருணாநிதி சாகனும் என ஜெயலலிதாவும் நினைத்தார்கள், கலைஞர் விருப்பப்படி ஜெயலலிதா சிறைசென்ற போது அதை உணரும் நிலையில் கலைஞர் இல்லை, ஜெயலலிதா விருப்பப்படி கலைஞர் இறந்தபோது ஜெயலலிதாவே உயிருடன் இல்லை,




மெத்தப் படித்த மன்மோகன் சிங். சோனியாவின் கருத்திற்கு பொம்மையாய் ஆடினார், ஆனால் ஏதோ படித்த பிரதமர் மோடியின் கருத்திற்கு உலகமே ஆடுகிறது, விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தையே அடக்கி ஆள முயல்கிறார்கள், ஆனால் பூமி நாளுக்கு நாள் மனித வாழ்வுக்கு உகந்த நிலையில் இருந்து விலகிச் செல்கிறது, கர்மாவனது உங்களுக்கு எதிராக வினையாற்றுவது இல்லை, உங்கள் செயல்களுக்கு எதிர்வினையாற்றத் தவறுவதே இல்லை, உங்கள் செயல்களுக்கான பலனை ஏதோ ஒரு வடிவில் உங்களிடமே சேர்த்துவிடும் மிகச் சிறந்த நிர்வாகி தான் கர்மா, யாரை அலட்சியம் செய்கிறோமோ. அங்கே தான் மண்டியிட வேண்டியதும் நேர்கிறது. வருகிறது, கேடு செய்ய யாருக்கு நினைக்கிறோமோ அதே கேடு நமக்கே வருகிறது என்பதை புரிந்து கொள்வோம், கொஞ்ச நாள் வாழும் வாழ்க்கையில் நன்மையை மட்டுமே விதைப்போம், நல்லவர்களாக வாழ்வோம், கெட்டவன் தானே தன் அழிவைத் தேடிக் கொள்கிறான், அவனோடு உங்களை கொஞ்சம் கூட ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம், “பாவ மன்னிப்பு” என்றமதச் சடங்கு இந்து மதத்தில் இல்லாதது ஏன் தெரியுமா? பாவங்கள் மன்னிக்கப்படுமானால். பாவிகள் தைரியசாலிகள் ஆகிவிடுவார்கள், இந்து மதம் பாவத்தின் அளவிற்கு தண்டனையை விதிக்கிறது, பாவம் உணரப்படும்போது. குறைந்தபட்ச தண்டனை கொடுத்து மன்னிக்கிறது, ஆனால். அப்படி ஒரு மன்னிப்பை வழங்குவதற்கு இங்கே யாரையும் நியமிக்கவில்லை கடவுள், இந்த விஷயங்களை நேரடியாக இறைவனே கவனிக்கிறான்.

ஏ. சக்திவேல்

# மக்கள் போற்றும் மாமனிதர்கள்



## என்னுள் நான்

42 தொடர்

### ...... தந்தை தாய்க்கு ......

**காவல் பயிற்சியில் உண்மையான துப்பாக்கியைகைகளில் ஏந்தியபொழுது காவல் பணியின் மீது ஒரு கர்வம் ஏற்பட்டது. ஒருவேளை பசிக்காக மீன் வாங்கித் தருவதைவிட, பிழைப்பதற்கு மீன் பிடிக்க கற்றுக் கொடுக்கலாம் என்ற பழமொழியைப் போல பொம்மை துப்பாக்கியை எனக்கு வாங்கி தரத்தயங்கிய பெற்றோர்கள், உண்மைதுப்பாக்கியை தொடும் அளவிற்கு உயர்த்தி வைத்தார்கள்.**




**டாக்டர். இரா. சிவக்குமார் ஐ.பி.எஸ்.**

கண்காணிப்பாளர்
மதுவிலக்கு அமலாக்கம்
சேலம் மண்டலம்

சின்ன சின்ன மகிழ்ச்சிகரமான விஷயங்களில் வாழ்க்கை அமைவது சிறப்புதான்-என்உடல் நிலை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. நாமக்கல் வெங்கடேஸ்வரா ஹேட்செரீஸில் பணியாற்றிக் 'கொண்டிருந்த ஒரே அலுவலகபெண்மணி திருமதி. உஷா நாயர் ஆங்கில அறிவும், சமயோதபுத்தியும் கண்ணியமும் மிக்கவர். ஆங்கிலத்தில் நிறையகுறிப்புகள்,கடிதங்கள் எழுதிக்கொடுத்து உதவுவார். நான் பயிற்சியில் கஷ்டப்படுவதை கேட்டறிந்து 14.02.2002 அன்று எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தகடிதம் என்னை உற்சாகப்படுத்தியது. சிறுவலிகளிலிருந்து மீள வழி சொன்னது.

எத்தனையோ திருவிழாக்களின் போது நான் அழுது ஆர்ப்பரித்து எனது தாய் தந்தையர் வாங்கித் தராத பொம்மை துப்பாக்கி என்னுள் இயக்கத்தையே ஏற்படுத்தியிருக்கிறது. காவல் பயிற்சியில் உண்மையான துப்பாக்கியைகைகளில் ஏந்தியபொழுது காவல் பணியின் மீது ஒரு கர்வம் ஏற்பட்டது. ஒருவேளை பசிக்காக மீன் வாங்கித் தருவதைவிட, பிழைப்பதற்கு மீன் பிடிக்க கற்றுக் கொடுக்கலாம் என்ற பழமொழியைப் போல பொம்மை துப்பாக்கியை எனக்கு வாங்கி தரத்தயங்கிய பெற்றோர்கள்,





Hope by God grace you are in pink of good health. Sorry, I thought of using this opportunity to write you a few words of mine which is ofcourse, deep inside from my heart. I don't know exactly about your present situation, but I know little bit through SB, and really feel very sad about the present condition of yours. I am nobody to advise you or to suggest, because you are far far experienced, well versed and a courageous personality. Training may be hard, I heard so. But think about the future, soon after the bitterness sweet is just getting ready. Please, don't loose your heart, just forget about everything and try to complete your training and I am going to meet our DSP sir Dr Siva, in a very short time.

Just imagine the happiness of your parents, relatives, friends, colleagues, well wishers etc... when you will complete your training and come out of the training centre as an Official and how we all will be proud of you.

I think I am boring you, if so, really sorry. Hope you have recovered from your leg pain. Pray God to keep you in good health as well as courageous for the successful completion of your training.

With regards,

திருமதி. உஷாநாயர்

உண்மைதுப்பாக்கியை தொடும் அளவிற்கு உயர்த்தி வைத்தார்கள். நாங்கள் அசோக் நகர் காவல் பயிற்சியின் 15-ஆவது அணி. ஏறக்குறைய எல்லோரும் சராசரி 30 வயதில் இருந்தோம். சரவணன், ஜெயலட்சுமி, சாம்சன் போன்றவர்கள் 30 வயதிற்கு குறைந்தவர்கள். காலை எழுந்தவுடன் 400 மீட்டர் தூரத்தை குறைந்தது ஐந்து அல்லது ஆறு முறை ஓட வேண்டும். இதில் மிக நன்றாக ஓடக் கூடிய உயரமான சரவணன், செல்வகுமார், மணிவண்ணன் முன் வரிசையில் நின்று ஓடும் பொழுது எங்களால் அவர்களுக்கு இணையாக ஓட இயலவில்லை. ஓடுகின்ற ஒரு அணியில் சிறு இடைவெளி ஏற்பட்டு பின் தங்கிய அணி (Back Squad) என்ற நிலை ஏற்பட்டது. எனக்கும் அப்பொழுதுதான் கால் வலி சிறிது குணமடைந்த காரணத்தினால், இதை எப்படி சமாளிப்பது? என்று யோசித்தோம். அணியை வழி நடத்திச் செல்லும் முன் கள ஓட்டவீரர்களாக

டி.கே.ராஜசேகரனும், நானும் ஜெயலட்சுமியும் எங்களை நாங்களே நிலை நிறுத்திக் கொண்டோம். ஓட்டம் ஆரம்பிக்கும் பொழுது வேமாக இருக்கும். நாங்கள் தூரத்தில் ஓடும் பொழுது எங்களுடைய வேகம் குறைந்திருக்கும். அனைவரும் ஒரே வேகத்தில் ஒரேமாதிரியாக கால்பதித்து ஓட வேண்டும் என்பதால் ஒருவர் மாற்றி ஒருவர் “லெப்ட் ரைட்” “லெப்ட் ரைட” என்றுசொல்லிக்கொண்டுஓடவேண்டும் பயிற்சியாளர் அருகில் இருக்கும் பொழுது இதைசரியாகச் சொல்லும் நாங்கள் அவரை விட்டு விலகி நீள்வட்டப் பாதையில் ஓடும் பொழுது “லெப்ட் ரைட் - லெப்ட் ரைட்” என்பதற்கு பதிலாக ”மாங்குயிலே, பூங்குயிலே” “மாங்குயிலே, பூங்குயிலே” என்று திரைப்பட பாடலை வேடிக்கையாகச் சொல்லும் பொழுது ஓர் உற்சாகம் கரை புரண்டு ஓடி. ஓடுவது இனிமையாக தெரிந்தது. ஒவ்வொரு புதன்கிழமையும் பயிற்சி நிலையத்தை விட்டுவெளியேறி கே.கே.நகர்,நாகாத்தம்மன் கோயில் வழியாக அரை மணிநேரம் ஓடிவருவோம். தொடர்ந்து ஓட முடியாது என்பதால், ஓட்டமும் வேகமான நடையுமாக அந்த பயிற்சி இருக்கும். வழக்கம் போல ஒருவர் கமெண்ட் கொடுத்துக் கொண்டுவர மற்றவர் ஓடுவோம். ராஜசேகருக்கு எப்போதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அப்போதெல்லாம் ஓடிக்கொண்டிருந்த எங்களை நடக்கச் சொல்லி “வாங்கிங் சேஞ்ச்” (Walking Change) என்று ஒரு கட்டளை கொடுப்பார். அப்போது வேமாக நடப்பது கூட இதமாக இருக்கும். அவருக்கு வாய்ப்புவரும் போது எல்லாம் இப்படி நடக்கிறது என்பதை பயிற்சியாளர் கண்டு பிடித்து விட்டார்.“இப்படி செய்யக் கூடாது, ஓட்டமும் நடையுமாக இருக்க வேண்டும்“என்று அறிவுரை சொல்லுவார்.மிகநன்றாக கவாத்து பயிற்சி எடுக்கும் திரு.சரவணனுக்கு தொடர்ந்து ஓடுவது என்றால் கொஞ்சம் பிரச்சனைதான். அதனால் அவரும் நாங்கள் அதிகமாக நடப்பதை கண்டு கொள்ளமாட்டார். அப்படி ஓடி வருகின்ற சாலைகளில், பள்ளிகல்லூரி சுற்றுச்சுவர்களில், ஒரு வாசகம் எழுதி இருக்கும்.




வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே, என்னிடம் வாருங்கள், இளைப்பாறுதல் தருகிறேன்”. நானும் ராஜசேகரும் அதை மௌனமாக பார்த்து படித்து புரிந்து ஒருவருக்கு ஒருவர் புன்னகைத்துக் கொள்வோம்.

அதேபோல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையும் காவல் கண்காணிப்பாளர் (SP Parade) கவாத்து பயிற்சி என்று நடைபெறும் மற்ற நாட்களில் செய்வதை போல் அல்லாமல் மிகச் சிரத்தையாக செய்வோம். முதல் நாள் வியாழக்கிழமை இரவே பயிற்சி மையத்தை மிக சுத்தமாக பெருக்கி சுண்ணாம்பு துகள்களால் அளவுகளை வரைந்தும், உடற்பயிற்சி சாதனங்களை முறையாக அடுக்கிவைத்து ஏறக்குறைய வியாழக்கிழமை இரவுபத்து, பதினொரு மணிவரை அதற்கான தயாரிப்பில் ஈடுபடவேண்டும். ஆளுக்கு ஒரு வேலையாக செய்து முடிப்போம். கைகளில் பிடித்துக் கொண்டு சுண்ணாம்பு கோடு வரைவது ஒரு காரசட்டியில் சுண்ணாம்பு துகள்களை கைகளால் அள்ளிநிரப்பி பின் வாக்கில் நடந்து கொண்டு கோடு போடுவது, சிறு, சிறு கொடிக்கம்பங்கள் ஆங்காங்கே வைப்பது என மிகவும் அமர்க்களப்படும். ஒவ்வொரு நாளும் காவல் கண்காணிப்பாளர் எங்கள் பயிற்சியை தூரத்தில் இருந்து கண்காணிப்பு செய்தாலும், வெள்ளிக்கிழமை அவராகவே நேராக பயிற்சிக்குவருவார். எங்கள் அணிவகுப்பை ஏற்றுக்கொள்வார். மிக நேர்த்தியாக உடற்பயிற்சி உடைகள் அணிந்து இருப்போம். அன்று காலை நடக்கின்ற அத்துணை உடற்பயிற்சிகளும் கவாத்து பயிற்சிகளும் மிக நேர்த்தியாக, வேகமாகநடைபெறும். எங்கள் உடம்பில் எவ்வளவு வியர்வைகள் ஊறியிருக்கிறது. உடைகளில் எவ்வளவு மண்

இருக்கிறது என்பதைப் பொறுத்து நாங்கள் கடினமாக பயிற்சி செய்தோம் என்பதை புரிந்து கொள்வார்களாம். ஆண்டாண்டுகாலமாக அப்படித்தான் நடந்து வருகின்றது. சிலசமயம் வியர்வையே வராதபோது தண்ணீரை முகத்தில் அடித்துத் கொண்டு தரையிலேயே படுத்துப் புரண்டு உடைகளில் மண்ணாக்கி கடின பயிற்சி செய்தது போல் காட்டிக் கொள்ளவும் செய்வார்களாம். எப்படி இருப்பினும் ஓர் உயர் அதிகாரி நேரடியாக பார்வையிடுகிறார் என்ற காரணத்தினால் அன்று மிகவும் உற்சாகமாக நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக அனைத்து பயிற்சிகளையும் மிகுந்த அக்கறையுடனும், முயற்சியோடும் செய்வோம். எங்களைவிட எங்களுக்கு பயிற்சி தருகின்ற தலைமை ஆய்வாளர், அதிகாரிகள் அந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக செயல்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்வார்கள். கல்லூரி முதல்வர் பாராட்டிவிட்டால், எங்களையும் புகழ்ந்து உற்சாகப் படுத்துவார்கள். ஏதாவது ஒரு குறை சொல்லி விட்டால், அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை அந்த குறையை போக்கி நிறைவாக செய்யும்வரை கொஞ்சம் கோபமாகவே இருப்பார்கள்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காக்கிச் சீருடை அணிந்து கொண்டுகைகளில் துப்பாக்கி ஏந்திக கொண்டு நடைப் பயணம் செல்வோம். அசோக் நகர் பயிற்சிகல்லூரியில் ஆரம்பித்து உதயம், காசிதியேட்டர் வழியாக ஈக்காடு தாங்கல் சென்று கத்திப் பாரா நேரு சிலை அருகே போரூர் வழியில் சென்று மீண்டும் அதே வழியில் பயிற்சிக் கல்லூரிக்கு திரும்புவோம். தொடர்ந்து நடக்க வேண்டுமென்றாலும், வெளியில் வேடிக்கை பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இருப்பதால் மிக சந்தோசமாக கலந்து கொள்வோம். மூன்று வரிசைகொண்ட அணியாக செல்வோம். பெரிய ரக துப்பாக்கியை எடுத்து செல்வதற்கு பல வழி முறைகள் இருக்கும். அவைரும் ஒன்று போல செய்வோம். துப்பாக்கியுடன் இணைந்த பட்டியை தோளில் மாட்டிக்கொண்டு செல்வது, துப்பாக்கியில் விசைக்கு அருகில் இலாவகமாக கை வைத்து பிடித்து எடுத்துச் செல்வது எளிதாக இருக்கும். இது எல்லாத்தையும் விட தோள்மீது துப்பாக்கியை படுக்க வைத்து வெட்டி முறிக்கச் செல்வது போல கம்பீரமாக நடக்கும் சிகாரி முறை எங்கள் அனைவருக்கும் பிடித்த ஒன்று. மலை பெய்யும் பொழுது துப்பாக்கியின் முக்கிய பயன்படும் பாகங்கள் நனையாமல் இருக்க லாவகமாக எடுத்துச் செல்லும் முறைகளையும் பயிற்சி செய்வது உண்டு. கத்திப்பாரா சந்திப்பு அருகே ஜோதி தியேட்டர் வளாகத்தின் அருகே இருக்கின்ற ஒரு தேநீர் கடையில் தேனீர் அருந்துவது மிக பிடித்தமான விஷயம் அப்போதெல்லாம் ஜோதி தியேட்டரில் ரசனை குறைந்த வேற்றுமொழி படங்களை அதிகம் போடுவார்கள். திரைப்படத்திற்கான போஸ்டரை பார்க்கும் கிறு கிறுப்பும், கிளு கிளுப்பும் அடைந்து கலகலப்பாக எங்களுக்குள் பேசிக் கொள்வது இதமான அனுபவம். ஆனால், எங்களை கண்காணிக்கும் அதிகாரிகள். நீண்ட நேரம் அங்கு நாங்கள் இருப்பதை அனுமதிக்க மாட்டார்கள். நாங்கள் நடந்து முன்னே செல்லும் பொழுது ஒரு நான்கு சக்கர வாகனத்தில் எங்களை பின் தொடர்வார்கள். ஆரம்பத்தில் இது அடிமைகளை வைத்து வேலைவாங்குவது போல் நாங்கள் எண்ணிக் கொண்டாலும், எங்களுக்கு ஏதாவது உடல் நிலை


கத்திபாரா மேம்பாலம்

பிரச்சினை என்றால் உடனடியாக எங்களை அழைத்துச் செல்வதற்காகவே அந்த வாகனம் வந்திருக்கிறது என்பதை பின் நாட்களில் புரிந்து கொண்டோம்.

உடைகளை மாற்றிக் கொள்வதும், அதை நேர்த்தியாக அணிவதும் ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும், போகப் போக அது ஒரு கலையாக மாறிவிட்டது. நல்லவேளையாக எங்கள் உடைகளை துவைத்து சலவை செய்து தர அங்கு ஆட்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். மிக நன்றாக அவர்கள் செய்தாலும், சிலநேரங்களில் டென்சன் ஆக்கி விடுவார்கள். விடிந்தால் உடற் பயிற்சிக்கு செல்ல வேண்டும். ஐந்து மணிக்கு எழுந்திருக்கும் எங்களுக்கு சில சமயங்களில், ஐந்துமுப்பதுமணி வாக்கில் தயாரான உடைகளை கொண்டு வந்து கொடுப்பார்கள். அதில் காலரில் யாருடைய உடை என்றுதெரிந்து கொள்ளும் வண்ணம், எங்களுக்கு அளிக்கப்பட்ட எண்ணை கருப்புமையில் குறித்து வைத்திருப்பார்கள். அதைசரியாக தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டு செல்ல வேண்டும். சில சமயங்களில் மாற்றி அணிந்து செல்வதும் உண்டு. எப்படி இருந்தாலும், ஐந்து முப்பதுமணிக்கு வெள்ளை தும்பைபூப் போல இருக்கின்ற உடையானது, ஆறு பத்துக்கு செம்மண்ணில் கலந்த செவ்வாடையாக மாறுவது கொஞ்சம் வருத்தமாகத் தான் இருக்கும். ஒரு முறை எனக்கான உடை தயாராக வில்லை. அதனால் நான் முதல் நாள் அணிந்திருந்த பழைய உடையை கொஞ்சம் தூசி தட்டி அவசரமாக அணிந்து கொண்டு மைதானத்திற்கு சென்றேன். நாங்கள் வரிசையாக நின்றதும், உதவி ஆய்வாளர் மணிகண்டன் வருகைப் பதிவு எடுத்து விட்டு உத்திரவு கொடுப்பதற்கு முன் என்னை தனியாக அழைத்தார். "பெரிய பதவிக்கு வந்திருக்கிறீர்கள் ஏன் சுத்தமாக உடை அணிய வில்லை? எல்லோர் முன்னிலையில் கேட்டால் வருத்தம் அடைவீர்கள் என்றுதான் தனியாக கேட்கிறேன்"என்றார். அதற்கு நான் மௌனமாக புன்னகைத்தேன். "ஏதாவது பதில் சொல்லுங்கள்" என்று கொஞ்சம் கடுமையாக கேட்டார். "இன்னும் பதினைந்து நிமிடத்தில் பதில் சொல்கிறேன்" என்று சொன்னேன். அதன் பிறகுஅனைவரும் மைதானத்தில் ஓடினோம். பலவித பயிற்சிகளை செய்து விட்டு ஒரு பதினைந்து நிமிடத்தில் மீண்டும் ஒன்றாக வந்து நின்றோம். அப்பொழுது என்னுடைய உடையை விடவும் மற்றவர்களுடைய உடை அதிக அழுக்காகி கசங்கிபோயிருந்தது. உதவி ஆய்வாளர் மணிகண்டனைப் பார்த்து புன்னகைத்து இதுதான் பதில் என்று சொல்லாமல் சொன்னேன். நான் செய்ததும் சொன்னதும் சரியல்ல தான். ஆனாலும், சில நேரங்களில் சூழ்நிலையை கருத்தில் கொண்டு விதி விலக்குகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டே இருக்கக்கூடாது என்பதை அவருக்கு புரியவைக்க அப்படி செய்தேன். அதன் பிறகு அவர் உடை விஷயங்களில் அவ்வளவு கறாராக நடந்து கொள்ள வில்லை. அதேசமயம், நானும் அதற்கு பிறகு சிறு அழுக்கு உள்ள உடையைக் கூட அணிந்து கொண்டு சென்றதில்லை. நாம் வைத்திருக்கும் உண்மையான காரணத்தினை அதை பொறுமையாக புரிந்து கொண்டு சிறுமதிப்பு அளித்தாலும், நமக்கு பெரும் நிறைவைத்தரும், ஆனால், நிறைய அரசுப் பணிகளில் இது நடப்பதே இல்லை.


ஜோதி திரையரங்கம்

நாங்கள் எப்போதும் நேர்த்தியாக உடை

அணிய வேண்டும் என்று அப்போதைய பயிற்சி கல்லூரி முதல்வர் டாக்டர். எம்.சி.சாரங்கன் ஐ.பி.எஸ். மிகக்கவனமாக இருப்பார். பயிற்சிக்கு, வகுப்புக்கு என்று உடை அணிவதையும் தாண்டி சாதாரணமாக இருக்கும் பொழுதும், முக்கிய கூட்டங்களுக்கு செல்லும் பொழுதும் எவ்வாறு உடை அணிய வேண்டும் என்பதை கவனமாக சொல்லிக் கொடுப்பார். தொடர்ந்து அசோக் நகர் பயிற்சி கல்லூரியிலேயே தங்கியிருந்த எங்களுக்கு மாதம் ஒரு முறையாவது சென்னையைச் சேர்ந்த ஒரு சிலகாவல் துறை அதிகாரிகளை அழைத்து ஓர் இரவுஅவர்களுடன் கலந்து பேசி விருந்துண்டு செல்ல ஏற்பாடு செய்தார்கள். காவல் துறை பணிகளை நேரடியாக தெரிந்து கொள்ளவும், உயர் அதிகாரியிடம் பேச அச்சத்தையும், கூச்சத்தை உடைக்கவும், அவர்களிடமிருந்து அனுபவங்களையும், அறிவுரைகளையும் பெற்றுக் கொள்வதற்காக இந்தஏற்பாடு. அதனால் அவர்களை சந்திக்க இருக்கின்ற அந்த இரவில் கோட் சூட் அணிய வேண்டும் என்பது முதல்வரின் ஆசை.


ரேமாண்ட்ஸ் ஷாப்

அதற்காக மிகச் சிறந்த உடைகளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஒரு நாள் மாலை எங்கள் அனைவரையும் ஒருபேருந்தில் அழைத்துக் கொண்டு தியாகராயநகர் பாண்டி பஜாருக்கு சென்றார்கள். அங்கு புகழ்பெற்ற ரேமென்ட்ஸ் நிறுவனத்தில் மெல்லிய நீலவண்ண மேலாடையை எடுத்துக் கொண்டு அதற்கு இணையாக கருநீல வண்ணத்தில் கோட் மற்றும் பேன்ட் துணியை எடுத்துக் கொண்டோம். இந்த துணிகளை அன்று மாலையே முதல்வரிடம் காண்பித்து ஒப்புதலும் பெற்றோம். அடுத்தநாள் மாலை அண்ணாநகரில் உள்ள ஹை-ஸ்டைல் (Hi-style) என்ற தையல் கடைக்கு சென்று உடைகள் தயாரிக்க எங்கள் உடல் அளவுகளைகொடுத்தோம். அப்போது எல்லோருக்குமே சிறிது சிரிப்பாகத்தான் இருந்தது. சீருடை அணியவே நேரம் இல்லாத காலத்தில் இந்த சிறப்பான உடைகள் எல்லாம் எதற்கு? என்று மனம் சொல்லியது. இருந்தாலும், இரண்டு நாட்கள் மாலை வகுப்புக்கு செல்லாமல் பாண்டி பஜார், அண்ணாநகர் என்று பேருந்தில் சுற்றியது இனியஅனுபவம். அதே கடையில் எங்களுக்கான உடையையும் தெரிவு செய்தோம். ஒருவாரம் கழித்து அந்த உடைகள் தயாராகி விடுதிக்கு வந்தன. அனைவரும் அவரவர்கள் அறையில் வைத்து போட்டு பார்த்து கொண்டோம். உண்மையிலேயே அனைவருக்கும் மிக அழகாக பொருத்தமாக இருந்தது. கல்லூரி முதல்வருக்கு நன்றி தெரிவித்து கொண்டோம்.

அவர் சின்னச் சின்ன விஷயங்கள் தான் சொல்வார். ஆனாலும், அவை பெரும் அர்த்தம் கொண்டவை. ஒருமுறை அடுத்து என்ன செய்யலாம்? என்று நாங்கள் பயணத் திட்டம் பற்றி பேசிக்கொண்டிருந்த பொழுது மதியம் 12 மணிமுதல் 3 மணிவரை ஓய்வு இருக்கிறது. 2.30 மணிக்கு சாப்பிட்டுவிட்டு 3மணிக்கு புறப்பட்டு அந்தகுறிப்பிட்ட இடத்திற்கு செல்லலாம் என்று பேசிக் கொண்டிருந்தோம். இடையில் குறிப்பிட்ட முதல்வர்,“12.30மணிக்கு பணி முடித்து விட்டால், மதிய உணவும்தயாராக இருந்தால், சாப்பிட்டு விடவேண்டும் காரணம் காவல் துறையில் எப்போது எதுவேண்டுமானாலும் நடக்கலாம். உண்பதற்கு என்று உறங்கு வதற்கு என்று நாம் நேரம் ஒதுக்கிவைக்க

முடியாது. நேரம் கிடைக்கும் பொழுது இதை இரண்டையும் செய்து கொள்ள வேண்டும் என்று உறுதிபட சொன்னார். அவர் சொன்னது போலவே அன்று 1.00 மணி முதல் 4 மணிவரை வேறு அவசர பணி எங்கள் அனைவருக்கும் இருந்தது. முதல்வர் சொன்னது போலநேரம் கிடைத்த பொழுது உணவு அருந்தியதால் அன்று பிரச்சினை இல்லாமல் போனது . அவர் நிறைய அறிவுரைகள் சொல்வார். பணியில் சேர்ந்த பிறகு குறைந்த பட்சம் 10ஜோடி காக்கி உடைகள் தயாராக வைத்திருக்க வேண்டும். நாம் பயணிக்கும் காரிலும் இந்த உடைகள் தயாராக இருக்க வேண்டும். உடையையும் உடலையும் ஜம்மென்று வைத்துக் கொள்ளவேண்டு மென்று அதுமட்டுமல்ல, எப்போதும் எங்கள் எதிர்கால காவல் பணிக்கு அழகாக அடித்தளமிட்டு கொடுத்தவர் எனலாம்.

கவாத்து பயிற்சியைப் பற்றி, சில பல நம்ப முடியாத கதைகளும் அவ்வப்போது அங்கு உலவுவது உண்டு. ஒவ்வொருமுறை நாங்கள் அட்டென்ஷன்.ீ. ஸ்டேண்ட் அட்ஈஸ் என்று காலை மாற்றி நிற்கும் நிலைவரும் பொழுதெல்லாம் இடது காலை அதிகம் பயன்படுத்துவதும் மிகவும் ஓங்கித் தரையில் அடிப்பதுமாக செய்வோம். அப்படித்தான் செய்ய சொல்வார்கள். அடிக்கடி ஓங்கி, ஓங்கி தரையில் அடிப்பதால் அதன் மூலம் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டு மூளை வளர்ச்சி குறையும் என்றும் ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்ட பொழுது இந்திய வீரர்களின் மூளை வளர்ச்சி குறைவாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் அவ்வாறு செய்யச் சொல்லி உத்திரவிட்டு விட்டார்கள் என்றும், அதை நாமும் தெரியாமல் கடைபிடித்து கொண்டே வருகிறோம் என்றும் ஒரு செய்தி பரவியது.



ஹை ஸ்டைல் தையலகம்

அது உண்மையோ, பொய்யோ அதைக் கேள்விப்பட்ட பிறகு காலை மிக வேகமாக ஓங்கி ஓங்கி அடிப்பதை நிறுத்திக் கொண்டோம். அதே போல சிலரின் கால் வலிக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்த பொழுது ஆரம்பத்தில் நாங்கள் உடற் பயிற்சி செய்வதற்காக வாங்கிய காலணிகள் மெத்தமாக இல்லாமல் இருந்த காரணத்தினால் மொத்த உடல் கனத்தையும் அப்படியே தரையில் தாங்க வேண்டியிருந்தது. அதன் பிறகு இரண்டாவது முறையாக காலணியை தேர்வு செய்யும் பொழுது “Force ten” என்ற காலணி ீஉபயோகித்த போது மிகுந்த பலன் இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தாங்கள் அணியக் கூடிய 3-4 வகையான காலணிகளை நன்றாக துடைத்து அதற்கு உண்டான நிறத்தில் பாலிஷ் போடுவது சில சமயம் வர்ணம் பூசுவது நடக்கும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தொடங்கி சனிக்கிழமை முடிகின்ற ஒவ்வொரு வாரத்திற்கும் நாங்கள் வாராந்திரஅறிக்கை (Weekly Report) எழுத வேண்டும். கைப்பட எழுதி அதை சமர்ப்பிக்க வேண்டும். இன்றுவரை காவல்துறை பணியில் மிக முக்கிய அறிக்கை அது. அதை எப்படி எழுதுவது என்று எல்லோருக்கும் குழம்பிக் கொண்டிருந்த பொழுது அருளரசு முன்னோடியாக ஒரு அறிக்கையை தயார் செய்ய, ஏறக்குறைய அதைப் பார்த்து அப்படியே அனைவரும் எழுதினோம். அதுவும் உயர் அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திங்கட்கிழமை சமர்ப்பிக்க வேண்டிய அந்த அறிக்கையை எல்லோருமே ஞாயிற்றுக்கிழமை இரவில் அவசரமாக எழுதி முடிப்போம்.

சனிக்கிழமை இரவு தாங்கள் வெகுநேரம் வரை வெளியே இருந்து விட்டு, விடுதிக்குள் வரலாம் என்ற ஒரு நிலை அனுமதி இருந்தது. ஆகவே, ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் உதயம், காசி, வடபழனி கமலா திரையரங்குகள் ஆகியவற்றில் ஏதாவது ஒரு படம் பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தோம். இதில், நானும் கேப்டன் சரவணன் சிவராசு மற்றும் சில நண்பர்கள் கண்டிப்பாக ஏதாவது ஒரு படம் பார்த்து விடுவோம். அப்படி நாங்கள் பார்த்து ரசித்த படங்களில் ஒன்று துள்ளுவதோஇளமை. நடிகர் தனுஷ் இந்த படத்தில் பள்ளி மாணவனாக அறிமுகமாகி இருப்பார். வகுப்பறையில் குறும்புகள் செய்யும் அவர்களை வெறும் தரையில் முட்டிபோட வைத்து விடுவார்கள். மிகசோகமாக முட்டிபோடும் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த மாணவர்கள், பள்ளி மாணவிகள் கடந்து செல்லும் பொழுது ஏதோ பெரிய யோகாசனம் செய்வது போல மூச்சை அடக்கி உற்சாகமாக செய்யும் காட்சி மிகுந்த சிரிப்பலையை ஏற்படுத்தியது.



காரணம் நாங்கள் கூட எங்கள் கவாத்து மைதானத்தில் அப்படிப்பட்ட நேரங்களை கடந்து கொண்டிருப்பதால் கூடுதலாக அந்த காட்சி மீது ஈர்ப்பு வந்தது. பெரும்பாலும், சனிக்கிழமை இரவு இரண்டாவது காட்சிக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருப்போம். சனிக்கிழமை இரவு மிக அதிகமாக சாப்பிடுவோம். அடுத்த நாள் காலை கவாத்து பயிற்சி இல்லை என்ற காரணத்தினால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சாப்பிடுவோம். திரைப்படம் பார்த்து விட்டு வருகின்ற அதிகாலை வேளையில் கூட உதயம் தியேட்டர் காம்ப்ளக்ஸ் அருகில் பசும் பாலை நன்றாக காய்ச்சி பாலாடையுடன் நன்றாக கலந்து மசாலாபால் என்று கொடுப்பார்கள். அதை நானும், சரவணனும் மிக விரும்பி வாங்கி சாப்பிடுவோம். ஞாயிற்றுக்கிழமை காலை உணவு பெரும்பாலும் தோசையும், கோழிக் கறியுமாக இருக்கும். இந்த உணவு எல்லோருக்கும் பிடித்தது என்றாலும், சரவணன் மிக விரும்பி சாப்பிடுவார்கள். அவர் சாப்பிடுவதைப் பார்க்க எனக்கு ஆசையாக இருக்கும். குறைந்த பட்சம் ஏழெட்டு பெரிய தோசைகள் சாப்பிவோம்.

காலையில் சிறிது ஓய்வு எடுத்து விட்டு மதியம் பதினோரு மணிவாக்கில் வேளச்சேரியில் அமைந்துள்ள தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டிடத்தில் உள்ள நீச்சல் குளத்திற்கு பயிற்சிக்காக செல்வோம். அங்கு சென்று நீச்சல் உடைமாற்றி நீச்சல் பயிற்சியை மேற் கொள்வோம். அதுவரை நீச்சல் அடிக்க கற்றுக் கொள்ளாதவர்கள், புதிதாக பயிற்சி செய்து அனைத்தும் முறையாக கற்றுக் கொண்டார்கள். ஆனால் அதற்கு முன்பு ஏறக்குறைய கொஞ்சம் நீச்சல் தெரிஞ்ச என்னை போன்றவர்கள் எப்படியோ இஷ்டப் படிகுதித்து மூழ்கி நீந்தி அந்த பக்கம் வந்து விடுவோம்.



இதுவரை இன்னும் முழுமையாக கற்றுக் கொள்ளவில்லை. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்னும் பழமொழி பல நேரங்களில் உண்மைதான். நீச்சல் குளத்தை விட்டு வெளியே வரவே மனம் இருக்காது. உட்புற, சுற்றுப்புற சுவரை பிடித்த வண்ணம் நீச்சல் குளத்தில் பலமுறை கடந்து வருவதும், இடையில் நின்று பேசிக் கொள்வதும் மீண்டும் மேலே ஏறி குதிப்பதும் நண்பர்களின் காலை விளையாட்டாக இழுத்துக் கொள்வதும் என்று மூன்று



மணி நேரத்திற்கு மேலாக மிக அருமையாக அங்கு பொழுதை போக்குவோம். பின்பு அங்கேயே உடைமாற்றிக் கொண்டு பயிற்சிக் கல்லூரிக்கு வந்து மதியம் சாப்பிட உட்கார்ந்தால் பெரும் மன்னர்களைப போல் சாப்பிடுவோம்.

நீச்சல் அடித்ததால் ஏற்பட்ட பசி நிறைய சாப்பிட வைக்கும். வழக்கமான மதிய நேரங்களில் சாப்பிடுவதை விட, மூன்று நான்கு மடங்கு அதிகமாக உணவு கொள்வோம். நிறைய சாப்பிடுவதில் பிரச்சினைகள் இல்லை தான். எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால், ஒவ்வொரு திங்கட் கிழமையும் மாலையும் எங்களுக்கு உடல் எடையை பார்ப்பார்கள். யார்? யார்? அதிக அளவில் எடையோடு இருக்கிறோமோ? அவர்களை தலைமை அதிகாரிகள் முன்பு ஆஜர் செய்து உடல் எடையை குறைக்க கூடுதலாக பயிற்சிதர ஏற்பாடு செய்தார்கள்.



பி. பெருமாள், எஸ்.மகேஸ்வரன், டி.கே. ராஜசேகர், நான், எ.ஜெயலட்சுமி பி. சரவணன், எஸ்.மணி ஆகியோர்

உடல் எடையை பொருத்தவரை அடிக்கடி மாட்டிக் கொள்வது நானும் ஜெயலட்சுமியும் தான். மிகக் குறைவாக சாப்பிட வேண்டுமென்று வைராக்கியத்தோடு நடந்தாலும், உணவு கூடத்தில் நண்பர்களோடு அமர்ந்து மெய் மறந்து வாய் மறக்காமல் நிறைய சாப்பிட்டு விடுவோம். இந்த எடையை போடுபவர் தலைமை காவலர் பாலகிருஷ்ணன். ஒவ்வொரு முறை எடை எடுக்கும் போதெல்லாம் அவரிடம் "நாங்கள் குறைவாக சாப்பிட்டாலும், எங்களுடைய உடம்பின் தன்மை என்ன வென்றால் எடை குறையாமல் இருப்பது. தண்ணீர் குடித்தால் கூட, எடை கூடி விடுகிறது" என்று ஏதாவது சாக்கு போக்கு சொல்லி கெஞ்சி சரியான அளவிற்கு எடையை அவராகவே குறித்துக் கொள்ள சொல்வோம். எங்கள் நிலையைப் பார்த்து பரிதாபப்பட்டு அவரும் ஓரளவுக்கு உதவி செய்வார். இருந்தாலும் கூட இரண்டு மூன்றுரவுண்ட் அதிகமாக ஓடச் சொல்லி அதை பதிவும் செய்து கொள்வார்

**அவர்கள் கடமையை சரியாக செய்ததால்தான் சக அதிகாரிகள் சரியாக செயல்படும் போது அவர்களை ஊக்கப் படுத்தியும், சில இடர்கள் செய்யும்போது அன்புடன் கலந்த உரிமையில் கண்டித்து செயல்பட நானும் இன்று எனது கடமையை அந்த வகையில் ஒரு காவல்துறை அதிகாரியாக இருந்து செயல்பட அவர்களது வழிகாட்டுதலே அதற்கு காரணம் என்பதே உண்மை. ஏன் என்றால் வரலாறு என்றுமே முக்கியமல்லவா?.......**


## ....இன்னும் வருவேன்

## உங்களின் ஒருவனாக....

**விவசாயி, மருத்துவர், நூல் ஆசிரியர், கவிஞர், காவலர் என பன்முகங்கள் கொண்ட இம்மாமனிதர் (வரிசையில் இவர்) எழுதும் இத்தொடர் பற்றிய தங்களின் மேலான கருத்துக்களை வரவேற்கிறோம். ஆ..ர்**

## அன்றாட வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்

# கேள்வி – பதில்...



குற்றவியல் வழக்கறிஞர் முனைவர். ஏ.பி.ஜெயச்சந்திரன்
M.A., (Crimin), M.Phil (Police Admin), Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD M.Sc., (Psy)
Cell :98430 30210

***1. முதல் தகவல் அறிக்கை என்றால் என்ன?***

பொதுவாக இந்திய குற்றவியல் நடைமுறைப்படி ஜாமீனில் வெளிவரக்கூடிய குற்றங்கள். வெளிவர முடியாத குற்றங்கள் என குற்றங்கள் இரண்டு வகைப்படுத்தப்படுகிறது, முதல் தகவல் அறிக்கை என்பது காவல்துறை குற்றத்தைப் பதிவு செய்யும் ஆவணம் ஆகும், கிரிமினல் வழக்கை முதல் தகவல் அறிக்கை இல்லாமல் விசாரிக்க முடியாது என்பதால் நீதி பெற இது முக்கிய செயல்முறை ஆகும், கொலை, பாலியல், குற்றம் வரதட்சனை, சம்பந்தமான குற்றங்கள், ஆள் கடத்தல், திருட்டு போன்ற குற்றங்கள் ஜாமீனில் வெளிவர முடியாத குற்றங்களில் அடங்கும், இதுபோன்ற குற்றங்கள் முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்யப்பட வேண்டும்,




***2,ஒருவர் எஃப்,ஐ,ஆர் பதிவு செய்திருந்தால் அவருக்கு அரசு வேலை கிடைக்குமா?***

அரசாங்க வேலையில் சேரும்போது ஒருவர், அவர் மீது ஏதாவது குற்றவழக்கு இருக்கிறதா என்று கூற வேண்டும், வழக்கு நிலுவையில் இருக்கும் போதும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று இருந்தால் அவருக்கு அரசாங்க வேலை கிடைக்காது, நீதிமன்றம் மூலம் அந்த வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று எஃப்,ஐ,ஆரிலிருந்து விலக்கு செய்தால் அரசாங்க வேலை கிடைக்கும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டால் பிடி வாரண்ட் இல்லாமலேயே காவல்துறையால் குற்றம் புரிந்தவரை கைது செய்து நீதிபதி உத்தரவு இல்லாமலேயே விசாரிக்க முடியும், ஜாமீனில் வெளிவர முடியாத குற்றத்தின் கீழ் கைது செய்ய வாரண்ட் வேண்டும், மேலும் விசாரணை மேற்கொள்ள நீதித்துறை உத்தரவு வேண்டும், தாக்குதல், மோசடி. ஏமாற்றுக் குற்றங்கள் போன்றவை இதில் அடங்கும் பிறகுற்றங்களின் தீவிரத்தன்மை சற்றேகுறைந்தது,

***3,யார் புகார் அளிக்கலாம்? எவ்வாறு அளிக்கலாம்?***

குற்றத்தால் பாதிக்கப்பட்டவரோ அல்லது குற்றம் பற்றி அறிந்தவரோ புகார் அளிக்கலாம், இது ஆன்லைன் மூலமோ அல்லது நேரிலோ அளிக்கலாம், குற்றத்தைப் பற்றி அறிந்த அல்லது நேரில் கண்ட காவல் அதிகாரி. முதல் தகவல் அறிக்கையை தானாகவே பதிவு செய்யலாம், குற்றத்தை நேரில் கண்ட யார் வேண்டுமானாலும் புகாரைப் பதிவு செய்யலாம், காவல் அதிகாரி ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கும் பொழுது புகார் அழைப்பு பெற்றால் புகாரைக் குறித்துக் கொண்டு. காவல் நிலையம் அடைந்தவுடன் புகாரைப் பதிவு செய்யலாம் (புகார் படிவத்தின் மாதிரி) ஆன்லைனில் புகாரைப் பதிவு செய்ய https://eservices.tnpolice.gov.in/CCTNSNICSDC என்ற இணையதளத்தை உபயோகிக்கவும், "ஆன்லைனில் புகார் பதிவு" என்பதை தேர்ந்தெடுத்து உங்கள் மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும், குற்றத்தைப் பற்றி விரிவாகப் பதிவு செய்யவும், புகாரை பதிவு செய்தபின். அதன் நிலையை அவ்வப்போது தெரிந்து கொள்ளலாம், புகாரை பதிவு செய்த பின்னர். சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திலிருந்து விசாரணை தொடங்கி, தொடர்பு கொள்ளப்படும், குற்றம் செய்ய முயற்சிப்பது, அதிகமான வட்டி வசூலிப்பது, சதித்திட்டம் தீட்டுவது, கள்ள நோட்டு அச்சிடுவது மற்றும் இணைய வழி குற்றம் போன்ற குற்றங்களை குறித்து ஆன்லைனில் புகார் அளிக்கலாம், நேரில் சென்று புகார் அளிக்க குற்றம் நடைபெற்ற இடத்தின் அதிகார வரம்பிலுள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்கலாம், வாய் வழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ புகாரை அளிக்கலாம்.

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்......

# புதியதோர் பாதை அமைப்போம்!!

## ஓர் புதிய பார்வை...



பாரதி சமூக அறக்கட்டளையை தொடங்கியவரும். இதனை ஒரு கட்டமைப்பாக அடித்தளமிட்டவரும். தற்போது இதன் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வரும் திரு,R.சுபாஷ் அவர்களைப் பற்றி ஒரு பார்வை,

ஜனவரி மாதம் 11ம் நாள் 1976ம் ஆண்டு கோவை சித்தாப்புதூரில் வசித்த K.N. இராமசாமி. கண்ணம்மாள் ஆகிய தம்பதியருக்கு நான்காவது மகனாக திரு.த.சுபாஷ் பிறந்தார், தனது ஆரம்பக் கல்வியை கோவை சித்தாபுதூர் மாநகராட்சி துவக்கப் பள்ளியில் தொடங்கினார், பின்பு அதே பள்ளியின் எதிரிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் (மேல்நிலை) பள்ளியில் 12ம் வகுப்பு வரை பயின்றார், பிறகு அரசுக் கலைக் கல்லூரியில் உளவியல் பிரிவில் முதுநிலைப் பட்டம் பெற்றஇவர் அறிவொளி இயக்கத்தில் மிகவும் ஆர்வத்துடன் இணைந்து பகுதி நேர ஆசிரியராக பணிபுரிந்ததோடு மட்டுமல்லாமல். மாலை நேரங்களில் சித்தாபுதூர் பகுதியில் கல்வி கற்காத மாணவ. மாணவியர் மற்றும் முதியோர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தார், மேலும் மத்திய அரசின் இளைஞர் மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் நேரு யுவகேந்திரா என்ற அமைப்பின் கோவைப் பகுதியில் சிறந்த ஆலோசகராகப் பணியாற்றினார், மேலும் சித்தாபுதூரில் படித்த தனது நண்பர்களுடன் இணைந்து 'வானவில்' நண்பர்கள் நற்பணி இயக்கம் என்றஅமைப்பை ஏற்படுத்தி தொடர்ந்து பத்து ஆண்டுகளாக அந்த இயக்கத்தின் தலைவராகப் பணியாற்றியுள்ளார், அவ்வானவில் நற்பணி இயக்கத்தின் மூலம் பல சமூக சேவைகளை முன்னின்று நடத்தி தன்னாலான சமூகப் பணிகளைச் செய்து சிறப்புடன் பணியாற்றினார், இச்சமயத்தில் அறிவொளி இயக்கத்தில் இவரது கல்விச் சேவையை பாராட்டி 1991ம் ஆண்டு ஜனவரி 26ம் தேதி குடியரசு தினவிழாவில் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சிறந்த இளைஞருக்கான விருது பெற்றுள்ளார்,



1996ம் ஆண்டு ஜுன் மாதம் 19ம் தேதி தன்னை விரும்பியவரும் இவர் விரும்பியவருமாகிய மரகதம் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார், அதன் பின்பு இவர்களுடைய இனிமையான இல்லறவாழ்க்கையில் S.தீபா மற்றும் S.வானதி ஆகியவர்கள் பிறந்தனர், தற்போது S.தீபா உணவு மற்றும் ஊட்டச்சத்து துறையில் முதுகலைப் பயின்று வருகிறார், இளைய மகள் S.வானதி கணிப்பொறித் துறையில் இளநிலை பயின்று வருகிறார்,

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதற்கிணங்க இவருடைய ா



உற்றதுணை வியாரின் ஊக்கத்தினாலும், இன்றுவரை தன்னார்வ சமூகத் தொண்டில் தன்னை முழுமைப்படுத்தி செயல்பட்டு வருகிறார் என்றால் அது மிகையாகாது, இவர் இதுவரை 33 தடவைகள் இரத்த தானம் செய்துள்ளார். கடந்த வருடம் 2020 மார்ச் மாதம் ஏற்பட்ட உலகப் பேரழிவை உருவாக்கிய புதிய கொடிய வைரசான கொரோனா தன் ஆதிக்கப் பிடியில் மக்களைப் பயமுறுத்தி மரணப் படுக்கையில் தள்ளிக் கொண்டிருந்த நேரத்திலும், கூட தன்நலம் கருதாமல் இவருடன் இணைந்து களப் பணியாற்றிய சக நண்பர்களை. ஆன்றோர்கள் முதற்கொண்டு. சான்றோர்கள் சிலர் வரை பாராட்டி ஊக்கப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தங்களுடைய ஆதரவினை தந்ததின் விளைவாக இவர்கள் புதிய உற்சாகம் கொண்டு. பாரதி சமூக அறக்கட்டளையை உருவாக்கி. தற்போது இவர் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்பட்டு வரும் இந்த சமூக அறக்கட்டளை பல நற்பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது,

இதன் செயலாக்கத்திற்கு






சுபாஸ் தன் மனைவி மகள்களுடன்

உறுதுணையாக இருந்த நண்பர்கள் புதிய பொறுப்பாளர்களாக நியமித்து அவர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக செயல்பட்டு செய்துவரும் செயல்பாடுகளைப் பற்றி பெருமையுடன் நம்முடன் பகிர்ந்து கொண்டார் R. சுபாஷ்.

இவர்கள் செயல்பாட்டினை இனி வரும் புதியதோர் பார்வையில் பார்க்கலாம்.





–எம். ரமேஷ்

SEITHIKALAVAI TAMILNADU INDIA

# யார் இந்த பாஷ்யம்?

இந்த பாஷ்யம் என்கிற பேரைப் பார்த்ததும் யாரென்று தெரியாமல் பாதிப்பேர் புலம்பினால் மீதிப்பேர் ஏதோ வடக்கன் எனச் சொல்லி திட்டிகிட்டு திரிகிறார்கள், ஆர்யாவைத் தெரியுமா என்று கேட்டால் நம்மில் அனைவரும் உடனே சொல்வோம்,,, அய்யே,,, ஆர்யா யாருன்னு கூட தெரியாதா? அவர் பெரிய ஹீரோ,,, ஆர்யாவின் இயற்பெயர் பாஷ்யம் என்றால் நாம் உடனே பின் வாங்குவோம். யோசிப்போம், நடிகர் ஆர்யாவின் இயற்பெயர் பாஷ்யமா,,, என கூகுள் செய்வோம், தாம் எப்பாடு பட்டாவது தலைவர் பதவிக்கு வர வேண்டும் என்று மாபெரும் கொள்கையுடன் "தமிழர் நலன்,,, தமிழ் தேசியம்" என்றெல்லாம் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் சமகால தந்திரசாலிகளைத் தலைவன் என்று போற்றிக் கொண்டிருக்கும் நமக்கு இந்த ஆர்யா என்கிற பாஷ்யம் சற்று அன்னியப்பட்ட பெயர் தான்.

1932 ஜனவரி மாதம் 25ம் நாள் அந்த ஆர்யா என்கிற பாஷ்யம் திருவல்லிக்கேணியின் கடைத்தெருவில் துணி கடைகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறான், அவன் கேட்டது. "இங்கே இந்திய தேசியக்கொடி இருக்கிறதா?" பலர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள், சிலர் அவர்கள் ரகசியமாய் விற்பனைக்கு வைத்திருந்த சிறிய அளவிலான கொடியைக் காட்டினார்கள், பாஷ்யத்தின் தேவை அந்த சிறிய கொடி அல்ல, அவனின் கற்பனையில் இருந்த கொடியின் அளவில் காலே. அரைக்கால் அளவு கூட இல்லை அவர்கள் காட்டிய கொடி, அவனின் தேவை பெரிய அளவு, மிகப் பெரிய அளவு யோசித்தான், ஒரு பெரிய நான்கு முழு வேட்டியை வாங்கினான், வண்ணப்பொடிக் கடையில் காவியும். பச்சையும். நீலமும் வாங்கிக் கொண்டான், தம்பு செட்டித் தெருவில் தான் தங்கி இருந்த அறைக்கு வந்தான் வாங்கி வந்த வேட்டியில் ஒரு பக்கம் காவியையும். ஒரு பக்கம் பச்சையும் கரைத்து நனைத்து நடுவே நீல ராட்டை வரைந்து ஒரு இந்திய தேசியக் கொடியை உருவாக்கினான், அதில் "இந்தியா இன்று முதல் சுதந்திரக் காற்றைசுவாசிக்கிறது" என்று எழுதினான், அதைக் காயவைத்து மடித்து இடுப்பில் சுற்றிக் கொண்டான், மேலே காக்கி அரை டவுசரும். காக்கி சட்டையும் அணிந்து கொண்டான்,


ஆர்ய பாஷ்யம்

மீண்டும் திருவல்லிக்கேணி வந்தான், சுப்ரமணிய சிவாவின் மருமகன் வேணுகோபாலைச் சந்தித்தான், "நான் எங்கு போனாலும் என் பின்னே தூரமாக தொடர்ந்து வா" எனக் கட்டளையிட்டான், இருவருமாக மவுண்ட் ரோட்டிலிருந்த எல்பின்ஸ்டன் தியேட்டருக்குள் நுழைவுச் சீட்டு வாங்கி நுழைந்தார்கள் இரவு பனிரெண்டு மணி படம் முடிந்து அனைவரும் வெளியேறசெயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் காவல் பணி முடிந்து பொழுது போக்க சினிமா பார்க்க வந்து வெளியேறியவர்களுடன் கலந்தான், அதற்காகத்தான் அந்த காக்கி சீருடை தயார் நிலை, காக்கி சீருடையில் கூட்டத்தில் கலந்து நுழைந்ததால் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இவனை யாரும் கண்டு கொண்டு தடுக்கவில்லை, காவலர்கள் தங்கள் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருக்க இவன் மட்டும் ரகசியமாய் பிரிந்து கோட்டையின் கொடிமரம் நோக்கி நடந்தான், 200 அடி உயரக் கொடிமரத்தில் 140 அடி ஏறிவிட்டான், அந்த அளவு வரை தான் கால் வைத்து ஏறும் வசதி இருந்தது, அதற்கு மேல் 60 அடி வெறும் இரும்புக்குழாய் அமைப்புதான் மனதில் எரிந்த சுதந்திர வேட்கை. அந்த இரும்புக் குழாயை இறுகப் பற்றும் உறுதியைத் தந்தது அவனுக்கு,

அடி அடியாய் ஏறி 60 அடியையும் கடந்து உச்சியை அடைகிறான், ஒரு உடும்பைப் போல தன்னை குழாய்களில் பிணைத்து இறுக்கிக் கொண்டு தன் இடுப்பில் இருந்து இந்திய தேசியக் கொடியை உதறி அந்த கம்பத்தில் கட்டுகிறான், சறுக்கியபடி கீழிறங்கி நழுவி மீண்டும் தம்புச் செட்டித் தெருவை அடைகிறான், மறு நாள் காலை செயின்ட் ஜார்ஜ் கோட்டை அலுவலக அதிகாரிகளின் மத்தியில் பரபரப்பு பற்றிக் கொள்ளுகிறது, எல்லா உயரதிகாரிகளும் கோட்டை கொடி மரத்தின் அருகே குழுமுகிறார்கள், "யார்? யார்?" கேள்விகள் அவர்கள் புருவங்களை உயர்த்த ஆத்திரம் அவர்களின் கண்களை சிவக்க வைக்க. கொடிமரத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறது அந்த அதிகாரிகள் கூட்டம், அதுவே அந்த தேசியக் கொடிக்கு அவர்கள் மரியாதை கொடுப்பதைப்

SETHIKALAVAI TAMILNADU INDIA



போன்ற ஒரு தோற்றத்தை தந்தது, எதுவுமே தெரியாதது போல் தம்புச் செட்டித் தெருவில் தனியாளாய் நடந்து கொண்டிருந்தான் பாஷ்யம் என்கிறஆர்யா,

அதே 1932ம் வருடம் ஜனவரி 26ம் தேதியை நாம் சுதந்திர தினமாகக் கொண்டாட வேண்டும் என்று ஜவஹர்லால் நேரு விடுத்திருந்த அறைகூவலை செயலாக்கவே பாஷ்யம் கோட்டையில் கொடி ஏற்றினான், இதை செய்தபோது அவனுக்கு வயது இருபத்தி ஐந்து, தற்போதைய திருவாரூர் மாவட்டம். அந்நாளைய தஞ்சாவூர் மாவட்டம். மன்னார்குடிக்கு அருகில் இருக்கும் சேரன்குளம் தான் அந்த ஆர்யா என்கிறபாஷ்யத்தின் சொந்த ஊர், இவன் ஒரு பார்ப்பனன் என்பதை இந்நேரம் கண்டுபிடித்திருந்தால் நீங்கள் ஒரு சமகால சமூக நீதி காவலன் என்பதை சொல்ல வேண்டாம், சீமானும். திருமுருகன் காந்தியும் பிரித்துக் கொண்டு போக தமிழ்நாடு ஒன்றும் யார் அப்பன் வீட்டு சொத்து அல்ல, இந்தியாவை உருவாக்கியது நாம், தேசியத்தமிழ் என்று சொல்லிப் பழகுவோம், இந்த தந்திர நரிகளின் தலைமை ஆசைக்கு பலிகடாவாக்கி தமிழ் தேசியம் என்று சீரழிய வேண்டாம், டெல்லியோ. மும்பையோ. கொல்கத்தாவோ சுதந்திர ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான் அங்கிருந்த கோட்டைகளில் தேசியக்கொடி பறந்தது, ஆனால். சுதந்திரம் வாங்குவதற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கோட்டையில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி அழகு பார்த்தவர்கள் நாம்தான், யாரோ சிலரின் நாற்காலி ஆசைக்கு எம் தேசத்தை கூறுபோட அனுமதிப்பதா? பொருளாதார தேடல் எங்கள் முன்னோர்கள் சொல்லிக் கொடுத்த "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது தான் நாங்கள் பூமிப்பந்தில் ஏதோ ஒரு மூலையில் நிலைகொண்டிருக்கலாம், ஆனால், இந்தியா என்தேசம் என்ற நினைவுகள் நுரையீரல் முழுக்க நிரப்பிக் கொண்டு தான் நாங்கள் இருக்கிறோம்,

வாழ்க இந்தியா,,,!!!

ஜி.பாலாஜி



செல்லத்தைக்
கையில் எடுத்து
கொஞ்சுவீங்களாக்கும்!

**செய்திக் கலவை**
மாத இதழ்


**பதிவு அலுவலகம் :**
53, வ.உ.சி. காலனி, சிட்கோ அஞ்சல்,
கோயம்புத்தூர் 641 021

இதழ் வளர்ச்சியில் உறுதுணை :
குற்றவியல் வழக்கறிஞர் முனைவர்
**ஐயா ஏ.பி.ஜெயச்சந்திரன்**
M.A., (Crimin), M.Phil (Police Admin),
Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD .,M.Sc.,(PSY)
வெளியிடுபவர், ஆசிரியர் :
**S.R. பாரதிராஜா**
செல் : 98946 09748, 94874 09748
துணை ஆசிரியர் : V. **சிவக்குமார்** BA.,
உதவி ஆசிரியர் : M. **ஷாஜஹான்** B.Sc.,
முதன்மை நிருபர்: P. **ரமேஷ் கண்ணன்**
G. **பாலாஜி** B.Sc., IT., MS., கணணித் தலைமை நிருபர் (Net Working - Australia)
**இந்திரகுமார்,** சென்னை நிருபர்
**தே. பால்ராஜ்,** கிழக்கு சென்னை நிருபர்
**த. மகேஸ்வரன்,** மேற்கு சென்னை நிருபர்
திண்டுக்கல் நிருபர் : A. **பாண்டியம்மாள்** BBA.,
தேனீ நிருபர் : **காமராஜ்**
கொடைக்கானல் நிருபர் : P. **சுதாகர்,**
திருச்சி மாவட்ட நிருபர் **எஸ்.என். ஜாகீர் உசேன்** BA.,
மதுரை மாவட்ட வடக்கு பகுதி நிருபர்.: A.**கண்ணன்**
நாமக்கல் மாவட்ட நிருபர் : B. **விக்னேஷ்**
ராமநாதபுரம் நிருபர் : P.ராஜேஸ்குமார்
ஈரோடு மாவட்ட நிருபர் : C. **கஜேந்திரன்** ITI
திருப்பூர் மாவட்ட நிருபர் பண்டிட் K.S. **கிருஷ்ணமூர்த்தி** M.A., B.L.,
கோவை மாவட்ட தலைமை நிருபர் : A. **சக்திவேல்** MBA.,
கோவை கிழக்குப் பகுதி மாவட்ட நிருபர் : S.S. **ஜானகிராமன்,**
கோவை தெற்குப் பகுதி மாவட்ட நிருபர் : M. **ரமேஷ்,**
கோவை மேற்குப் பகுதி மாவட்ட நிருபர் : G. **ஜெனி சேகர்** BE.,
கோவை மாநகர நிருபர் : S. **பிரபாகரன்**
நிருபர்கள் :
P. **கார்த்திகேயன், தமிழ்ச்செல்வன்**
M. **மாரியப்பன்,** A.**அப்துல் சலாம்**
S.N. **குமார்,** G. **குமார்,** S. **கருணாகரன்,**
S. **சக்திவடிவேல், சிவக்குமார்,**
**ஜெ. வர்க்கிஸ் வனத்தையன்** பி.ஏ., S. **கார்த்திகேயன்** BE.,EEE
K. **கனகம்** B.Lit., S. **ராணி, மேரி ஜெனிஃபர், வைஷ்ணவி**
**கோவிந்தராஜ், பாலசுப்பிரமணியம்**
**க. தேவேந்திரன்,** ஆர். அன்பழகன் B.Com, (C.A).,
திண்டுக்கல் புகைப்பட கலைஞர் R. **அந்தோணி,**
தலைமை புகைப்படக் கலைஞர், நிருபர் : L. **சண்முகசுந்தரம்**
இதழ் வடிவமைப்பு :
தருண் கிராஃபிக்ஸ்
தகவல் பரிமாற்றத்திற்கு
E-mail: editorseithikalavai@gmail.com | www.seithikalavai.com

கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்களுக்கு கட்டுரை யாளர்களே பொறுப்பு. புலனாய்வுச் செய்திகளை இயன்ற வரை தீவிர விசாரணைக்குப் பின்னரே அச்சிலேற்றுகிறோம். சில சமயங்களில் சம்பந்தப்பட்டவர்களே அவர்கள் மீதான செய்திகளுக்கு உரிய பதில் அளிப்ப தில்லை. எனவே, வெளியாகும் செய்திகளில், சம்பந்தப் பட்டவர்களுக்குக் கருத்துபேதம் இருந்தால், அது குறித்து அவர்கள் தரப்பு விளக்கத்தை அளிக்கலாம். விளம்பரங் களின் உண்மைத் தன்மைக்கு அவர்களே பொறுப்பு. கட்டுரைகள், செய்திகளைச் சுருக்கி வெளியிட ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION COIMBATORE CITY COURTS ONLY. NOTHING IN 'SEITHI KALAVAI' MONTHLY IS INTENDED TO DEFAME ANY PERSON, BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

# தோள் சீலைப் புரட்சி



சுவாதி திருநாள்

பார்ப்பன நம்பூதிரிகள் கேரளாவில் யாரையும் விட்டு வைக்கவில்லை, அவர்கள் போர் மறவர்களான நாயர்களை தரவாடு என்றகுடும்ப அமைப்பைக் கொண்டு இழிவுப் படுத்தி தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொண்டனர், அரசர்களிடம் நேரடியாக அது போன்றஏற்பாடு செல்லாது என்பதால் அவர்களை மஹாபலி கதையைக் கூறி அரச வம்சத்தினர் அனைவரும் "விஷ்ணுவின்" அடிமைகளும் கோவிலுக்கே சொந்தம் என்று சட்டத்தினை மாற்றினர், அரசன் எந்த செலவு செய்வதென்றாலும் கடவுளின் நேரடித் தொடர்பிலிருக்கும் பார்ப்பன நம்புதிரி ஒப்புதல் இல்லாமல் செய்யக்கூடாது. அது மட்டுமல்லாமல். தம்பூரான்கள் என்று சொல்லப்படும் அரச குடும்பத்தவர்கள். தங்கள் மனைவிகளின் முதல் குழந்தையை மட்டும் கட்டாயம் நம்புதிரிகளின் தூய்மையான இரத்த சம்பந்தம் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டாயமாக்கினர், இது மட்டுமல்ல அரசனாக ஒரு இளவரசன் முடி சூட்டிக் கொள்ளும்போது தன் பெற்றோர் வைத்த பேரையும் மாற்றிக் கொள்ள வேண்டும், அதன் பின் அவர்களின் பெயர் அவர்களின் பிறந்த நட்சத்திரமாக மட்டும் இருக்கும், உதாரணமாக சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த இளவரசன் அரசனாகும் போது அவன் பெயர் சுவாதி திருநாள் என்று மாற்றப்படும், ஐந்து அரசர்கள் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தால் எல்லோரும் சுவாதித் திருநாள் தான், ஆக. எந்த அரசன் எந்த நல்லது செய்தான் என்றும் யாருக்கும் தெரியாது,




நங்கோலி

அரச வம்சம். நம்பூதிரி வம்சம். நாயர் வம்சம் இம்மூன்றையும் தவிர்த்து ஏனைய எல்லா மக்களும் கேரளாவில் தீண்டத் தகாதோர் ஆக்கப்பட்டனர், மற்ற அனைத்து மக்களும் ஆண்களாக இருந்தாலும் சரி. பெண்களாக இருந்தாலும் சரி இடுப்பிலிருந்து முழங்கால் வரை மட்டுமே ஆடை அணிய வேண்டும் என்பதைச் சட்டமாக்கினர், பெண்கள் எப்போதும் திறந்த மார்புடன்தான் இருக்க வேண்டும், ஆண்களில் அரசனையும். நாயர்களையும் தவிர யாரும் மீசை தாடி வைத்துக் கொள்ளக்கூடாது, மீசை. தாடி வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக வரி செலுத்த வேண்டும், பெண்கள் மேலாடை அணிந்து மார்பை மறைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக முக்கியம் என்றவரி செலுத்த வேண்டும், அந்த வரி செலுத்தினாலும். பார்ப்பன நம்புதிரிகள் எதிரில் வந்தால் தோள் சீலையை விலக்கி மார்பை காட்டித்தான் நிற்க வேண்டும், வரி செலுத்துவது பார்ப்பனர் அல்லாதோர் முன் மார்பை மறைக்கவே! இந்த கொடுமைகளின் உச்சம் மக்களின் கவனத்திற்கு முதன் முதலில் வந்தது 19ம் நூற்றாண்டில்தான், அப்போது கேரளாவில் உள்ள சேர்த்தலா என்றஊரில் நங்கோலி என்றஈழுவா சாதியை சேர்ந்த பெண் வாழ்ந்தாள், ஒரு முறைநாயர்கள் முலைவரி வசூலிக்க வந்தபோது சற்று பொறுங்கள் என்று கூறி உள்ளே சென்றவள் ஒரு தலை வாழை இலையில் (இந்த வரிப்பணத்தை மரியாதையாக வாழை இலையில் வேறு

வைத்துக் கொடுக்க வேண்டுமாம்) தன் இரு முலைகளையும் அறுத்து வைத்து கொண்டு வந்து கொடுத்து விட்டு மயங்கி விழுந்து இறந்தாள், அதிர்ந்து போன நாயர்கள் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர், பின்னர் அங்கு வந்த அவள் கணவன் சிறுகண்டன் அவளை எரிக்கும்போது அந்த நெருப்பில் தானும் குதித்து தற்கொலை செய்து கொண்டான், கேரளாவில் பார்ப்பனரை எதிர்த்து நடந்த முதல் புரட்சி வித்து இதுதான்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேரளாவில் ஆங்கிலேயர்கள் அதிக அளவில் இருந்தார்கள், இந்த முலைவரி வாங்கும் பாாப்பனர் தந்திரம் ஆங்கிலேயர்களிடமும். இஸ்லாமியர்களிடமும் செல்லாது. கேட்டால் இது இந்துமத தர்மம். இவை இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று சொல்லிவிட்டனர், ஆக முலைவரி சட்டம் கி,பி,இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கிருத்துவர்களாக இருந்த சிரியன், ஜோனகர் ஆகியோருக்குப் பொருந்தாது, மோபில்லா என்று அழைக்கப்படும் இஸ்லாமியரையும் கட்டுப்படுத்தாது அந்தப் பெண்கள் குப்பாயம் என்று அழைக்கப்படும் நீண்ட கைகளுடைய ஜாக்கெட்டுகளை அணிந்து வந்தனர், இந்த முலைவரி வாங்கும் பார்ப்பன தந்திரம் அவர்களிடம் பலிக்கவில்லை, அந்த காலக்கட்டத்தில் முழுக் குமரி மாவட்டம். நெல்லை. தூத்துக்குடி மாவட்டங்களில் சில மேற்குப் பகுதிகள் திருவிதாங்கூர் மற்றும் திருவனந்தபும் சமஸ்தானத்தில் தான் இருந்தன, அங்கு வாழ்ந்த பெருவாரியான சாணார். நாடார் சாதியைச் சேர்ந்தவர்கள் இவர்களும் இந்த முலைவரியில் சிக்கித் தவித்தனர்,




1813ல் கர்னல் ஜான் மன்றோ என்ற ஆங்கிலேயர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் தூதுவராக இருந்தார், அவர் திருவிதாங்கூர் அரசனை வற்புறுத்தி பரம்பரைக் கிறிஸ்துவர் மட்டுமல்ல. இனி கிறிஸ்துவராக மாறும் அனைவருக்கும் முலை வரியிலிருந்து விலக்கு அளிக்க சட்டம் கொண்டு வந்தார், உடனே பெருவாரியான சாணார்கள். கிருத்துவ மதத்திற்கு மாறினர், ஒரு புறத்தில் சாணார் மக்கள் கிருத்துவத்திற்கு மாறும்போது குமரி மாவட்டத்தில் சாணார்களில் ஒரு தலைவன் தோன்றினார், அவரது பெயர் வைகுண்டர், மக்கள் அவரை ஐயா வைகுண்டர் என்று அழைப்பார்கள், அவர் தான் முதலில் கிருத்துவ மதம் மாறமாட்டோம், நாங்கள் இந்துக்களாகவே இருப்போம், ஆனாலும் எம்பெண்களும் குப்பாயம் அணிவார்கள். உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள் என்று போராட்டத்தை கையில் எடுத்தார், கேரள மன்னன் படைகள் போராட்டத்தை ஒதுக்குகிறேன் என்றபெயரில் வன்முறையை கட்டவிழ்த்து விட்டது, ஆண்கள். பெண்கள் என அனைவரும் அடித்து துவைக்கப்பட்டனர், இறுதியாக 1859ல் சென்னை மாகாணத்தின் கவர்னராக “சார்லஸ் ட்ரெவிலியான்” கொண்டு வந்த பிரகடணத்தின்படி. கேரள அரசர்கள் சாணார் மக்கள் எந்த மதமாக இருந்தாலும் மேலாடை அணியலாம் என்று சட்டம் கொண்டு வந்தார், அப்போதும் முலைவரி முழுமையாக நீக்கப்படவில்லை, கேரளாவில் ஈழுவ. முக்கவாட்டிகள் (மீன் பிடிப்போர்) போன்றபல சாதி மக்கள் அவதிபட்டுக் கொண்டுதான் இருந்தார்கள், ஐயா வைகுண்டரின் பிரச்சாரங்களில்




SETHIKALAVAI TAMILNADU INDIA


ஈர்க்கப்பட்டவர்கள் கேரளாவில் இருவர். ஒருவர் நாராயணகுரு மற்றொருவர் ஐயன் காளி,

இதில் நாராயணகுரு ஈழுவ சாதியைச் சேர்ந்தவர், இந்த ஈழுவ சாதி மக்கள் தெருவில் நடந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்றபோராட்டத்திற்கு தான் கேரள மக்கள் நமது ஐயா பெரியாரை அழைத்துச் சென்று போராடி. வெற்றி பெற்று பெரியாருக்கு “வைக்கம் வீரர்” பட்டமும் அளித்தனர், நாராயணகுரு இந்து மதம் முக்கியம் ஆனால் மக்களுக்கு சுயமரியாதை அதைவிட முக்கியம் என்று கூறி. ஐயா வைகுண்டர் வழியில் மக்கள் இந்து மதத்திலிருந்து மாறாமல் முலைவரிச் சட்டத்தை எதிர்த்து மக்களைப் போராட வைத்தார், ஐயன் காளி இதைவிட சிறப்பானவர், இவர் புலையர் இனத்தில் பிறந்தாலும். எப்படியோ களரி பயிற்சி பெற்று அதில் மிக





சிறந்து விளங்கியவர், மிகவும் உடல் வலிமையும் கொண்டவர், இவர் காலத்தில் கேரளா வந்த விவேகானந்தர் கேரளாவை சாதிப் பைத்தியங்கள் வாழும் பைத்தியக்கார விடுதி என்று சொல்லி விட்டுச் சென்றார், இவரது களரி பயிற்சி காரணமாக நாயர்கள். நம்பூதிரிகள் யாரும் வம்பு வைத்துக் கொள்ள மாட்டார்கள், பெருங்கட்டு விளை என்றகிராமத்தில் பிறந்த இவரை ஊர் பிள்ளை. மூத்த பிள்ளை என்று பெருமையோடு அழைப்பார்கள், இவரது பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகே 1928ல் சட்டப்பூர்வமாக முலைவரி நீக்கப்பட்டது, 1891ல் பிறந்த அம்பேத்கரைப் போலவே புலையர்




என்றதாழ்ந்த சாதியில் பிறந்த ஐயன் காளி ஒரு வகையில் அம்பேத்கருக்கும் முன்னோடி என்றும் சொல்லலாம், 1893லேயே அம்பேத்கர் கோட் சூட் போடுவதைப் போல எப்போதும் செர்வானி போன்றஒரு கோட்டு பட்டு அங்கவஸ்திரம். பட்டு சரிகையுடன் தலைப்பாகை. மணி கட்டிய இரட்டை மாட்டு வண்டியுடன் தலைப் பாகையுடனும் வலம் வந்து பார்ப்பன நம்பூதிரிகளை வெறுப்பேற்றுவார்,

இத்தனைப் போராட்டங்களுக்கு முதல் வித்திட்ட ஐயா வைகுண்டரை இப்போது ‘‘விஷ்ணுவின்’’ அம்சம் என்று சொல்லிக்கொண்டு அவருக்கு கோவில் கட்டி எந்தப் பார்ப்பனரை எதிர்த்துப் போராட்டம் செய்தாரோ. அந்த பார்ப்பனர்களைக் கொண்டே அந்தக் கோவிலுக்கு குடமுழுக்கு எடுக்கின்றனர், சில நாடார்கள். சென்னையில் மேற்கு முகப்பேரில் கூட ஐயா வைகுண்டர் கோயில் ஒன்றைப் பார்க்கலாம், இப்போது புரிகிறதா கடவுள் இல்லவே இல்லை என்று அழுத்தம் திருத்தமாக பெரியார் ஏன் சொன்னார் என்று! இல்லை என்றால் இன்று ஒரு கூட்டம் அவருக்கு கோயில் கட்டி பார்ப்பனரை வைத்தே குடமுழுக்கு செய்து இருக்கும்,

**வே. சிவக்குமார்**



ராணி-யின்

# சுவையான சமையல்



## கலவை பொங்கல்




தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1,காரட் | 250 கிராம் |
| 2,பச்சை மிளகாய் | 15 |
| 3,கடுகு | 1 ஸ்பூன் |
| 4,பெருங்காயம் | 1 ஸ்பூன் |
| 5,வெந்தயம் (பொடித்தது) | 1 ஸ்பூன் |
| 6,எலுமிச்சை | 1 |
| 7எண்ணெய் | 100 கிராம் |
| 8.வினிகர் | 2 ஸ்பூன் |
| 9,உப்பு | தேவையான அளவு |

**செய்முறை:**

காரட்டை பொடியாக நறுக்கிக் கொள்ளவும், அதனுடன் பச்சை மிளகாயையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும், ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு போட்டு பொறிந்தவுடன் வெந்தையம் போடவும். பிறகு காரட். பச்சை மிளகாய். உப்பு சேர்த்து நன்றாக கிளறிய பின் எலுமிச்சை பழத்தின் சாரை பிழிந்து விடவும் அல்லது பொடிப் பொடியாக நறுக்கி சேர்த்து கிளறவும், கடைசியாக வினிகர் மற்றும் பெருங்காயத்தூள் சேர்க்கவும்,

**காரட் ஊருகாய் ரெடி,**

## கோதுமை ரவை பொங்கல்

**தேவையான பொருட்கள்:**

| | | |
|---|---|---|
| 1, | கோதுமை ரவை | 100 கிராம் |
| 2. | பாசிப் பருப்பு | 100 கிராம் |
| 3, | பால் | 500 மிலி |
| 4, | வெல்லம் | 200 கிராம் |
| 5, | முந்திரி | 10 |
| 6, | திராட்சை | 10 |
| 7, | ஏலக்காய் | 5 |
| 8, | நெய் | 25 கிராம் |

**செய்முறை:**

ஒரு ஸ்பூன் நெய்யை ஊற்றி அதில் பாசிப்பருப்பு, ரவை இரண்டையும் வாசனை வரும் வரை வறுத்துக் கொள்ளவும், பிறகு ஒரு குக்கரில் வறுத்த பாசிப் பருப்பு. ரவையைச் சேர்த்து அரை லிட்டர் தண்ணீரில் 3 விசில் வரும் வரை அடுப்பில் வைக்கவும், பிறகு இதனுடன் சாய்ச்சிய வடிகட்டிய வெல்லத்தை சேர்க்கவும், இதோடு பாலை காய்ச்சி சேர்க்கவும் இதை 5 நிமிடம் நன்றாக கொதிக்க விடவும், கடைசியாக நெய்யில் முந்திரி, திராட்சை, ஏலக்காய் சேர்த்து வறுத்து பொங்கலுடன் சேர்க்கவும் இது மிகவும் நல்ல மணத்துடன் சாப்பிட சுவையாக இருக்கும்,


**கோதுமை ரவை பொங்கல் ரெடி,**



SEITHIKALAVAI TAMILNADU INDIA

# நூதன மோசடி
# பாஸ்போர்ட் பக்கம் கிழிப்பு

அயல் நாட்டில் இந்தியத் தமிழர்களே கவனம், சில இந்திய விமான நிலையங்களில் அதிகாரிகளால் நடத்தப்படும் பாஸ்போர்ட் மோசடி, இந்தியாவிற்கு வெளிநாட்டில் இருந்து விடுமுறைக்கு வருகை தரும் இந்தியர்களே கவனம்! இமிகிரேஷன், கஸ்டம்ஸ் அதிகாரிகள் துணையோடு நடக்கும் மோசடி இது, வெளிநாடு செல்லும் நீங்கள் லக்கேஜ் செக்இன் செய்து விட்டு இமிகிரேஷன் மற்றும் கஸ்டம்ஸ் அதிகாரிகளிடம் உங்கள் பாஸ்போர்ட்டை அதிகாரியிடம் சோதனைக்கும் இந்தியாவிலிருந்து வெளியேறும் நாள் ஸ்டாம்ப் பதியத் தருகையில் மிகவும் கவனமாக இருக்கவும், பாஸ்போர்ட்டை அதிகாரியிடம் சோதனைக்குத் தந்துவிட்டு வேறு பக்கம் பராக்குப் பார்த்தபடி இருந்தால் தாங்கள் கவனிக்காத போது கஸ்டம்ஸ் இமிகிரேஷன் அதிகாரி அலுவலர் உங்கள் பாஸ்போர்ட்டில் உள்ள ஒரு பக்கத்தை கிழித்து எறிந்து விட்டு உங்கள் பாஸ்போர்ட் எண்ணை அபாயகரமானவர்கள் லிஸ்டில் சிகப்பு அபாய குறியீட்டுடன் அகில இந்திய ஏர்போர்ட்டுகளுக்கு அபாய அறிவிப்பைச் செய்து விடுவார்,





பாஸ்போர்ட் ரினிவல். பிறநாட்டுத் தூதரகங்கள். வெளிநாட்டு இந்திய தூதரகத்திலும் இந்த பாஸ்போர்ட் பக்க கிழிப்பால் மிகப் பெரிய அல்லலுக்கு உட்படுவீர்கள், உங்கள் பாஸ்போர்ட்டில் ஒரு பக்கத்தைக் கிழிக்கப்பட்டதை அறியாத நீங்கள் அடுத்த முறை இந்தியா செல்லும் போது. அறியாமையால் விபரம் அறியாமல் உங்களுக்கு விரிக்கப்பட்ட இந்த வலையில் வீழ்ந்து மிகப் பெரிய சட்ட சிக்கல் கிரிமினல் குற்றத்திற்கு உள்ளாக்கப்படுகின்றீர்கள், உங்கள் கல்வி. பார்க்கும் வேலை அயல்நாட்டில் பெறும் சம்பளம். உங்கள் குடும்ப விபரம் என அனைத்தையும் அறிந்துகொண்டு பெரிய அமௌண்ட் பணம் பேரம் பேசப்படும், அநாவசியமாக நீதி, நேர்மை என்று கீழ்மட்ட கோர்ட்டுகளுக்கு அலைந்தால் உங்கள் வாழ்வு நாசமாக்கப்படும் அபாயம் பெரிய கோர்ட்டுகளுக்குச் செல்ல பெரிய வக்கீல். லட்சக்கணக்கில் பணம் என்று பெரிய சங்கடத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும்,

ஹைதராபாத். மும்பை என பெரிய நகரங்களில் மாதம். பத்து அல்லது இருபது பாஸ்போர்ட் பக்கக் கிழிப்பு மோசடி கிரிமினல் வழக்குகளில் தங்கள் தவறு என்ன என்றே தெரியாமல் பலர் மாட்டிக்கொண்டு வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள், இதை வாசிக்கும் வெளிநாடு வாழ் இந்தியர்களே. தமிழர்களே இந்த மோசடியைத் தாங்கள் அறிந்த, தெரிந்த வெளிநாட்டு வாழ் இந்திய, தமிழ் நண்பர்களுக்கு அறியப்படுத்தவும்.

**பி. ரமேஷ்கண்ணன்**

**The Registrar of Newspapers for India TNTAM/64745/2015**

**Owned and Published by S.R. BARATHIRAJA** from 53, V.O.C. Colony, SIDCO Post,
Near L.I.C. Colony, Coimbatore - 641 021 and Printed by P. Manoharan at Suriya Offset Printers, D.No. 64, 8th Street, Cross Cut Road, Gandhipuram, Coimbatore - 641 012.

**Editor : S.R. BARATHIRAJA Cell : 98946 09748, 94874 09748**



# “அருங்கலையரசும்”- அற்புத அரங்குகளும்


## அமரர். பா. அங்கமுத்து

**தன் தந்தையைப் பற்றியும்? புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி பற்றியும் பல அறிய, அறியாத ? தெரியாத செய்திகளை நம் செய்திகலவை வாசகர்களாகிய நம்மிடம் பகிரும் விதமாக தொடர்ந்து நம் இதழில் எழுத உள்ளார். அவரை பற்றிய முன்னோட்டம் இதோ.**

சென்னையில் பிறந்து ஓவியக்கல்லூரியில் பேச்சுலர் ஆப் பைன் ஆர்ட்ஸ் படித்தவர் எட்டாவது வயதிலிருந்தே தந்தையுடன் கலைத்துறையை கற்றுகொள்ள தொடங்கினார். தந்தை அங்கமுத்து தாயார் கற்காம்பாள் அம்மையாருக்கு நான்காவதாக பிறந்தவர் சண்முகம். இவருக்கு மூத்த சகோதரி உத்தராவதி இரண்டாவது மூத்த சகோதரர் திருமாள்வளவன், மூன்றாவது மூத்த சகோதரி கலாவதி, ஐந்தாவது இளைய சகோதரி பொன்னி, ஆறாவது இளைய சசோதரி சுந்தரவதனம், ஏழாவது இளைய சகோதரி மங்களம் ஆவார்கள்.

புரட்சித்தலைவர், புரட்சித்தலைவியுடன் மிகவும் நெருக்கமான நட்புறவில் வாழ்ந்தவர் தற்போது 24 திரைப்பட சங்கங்களின் ஒருங்கிணைப்பான (பெப்ஸ்சி) பொதுச் செயலாளராக உள்ளார்.

*விரைவில் நமது வாசகர்களை இதழ் மூலம் தொடர்ந்து சந்திக்க உள்ளார்.*



தலைவர்
கலை இயக்குநர்கள் சங்கம்

பொதுச்செயலாளர்
தென்னிந்திய திரைப்பட
தொழிலாளர்கள் சம்மேளனம்
சென்னை

SEITHIKALAVAI – MONTYLY The Registrar of Newspapers for the India TNTAM/64745/2015

# பிப்ரவரி 14, 2019, புல்வாமா தாக்குதலில் உயிர் நீத்த ராணுவ வீரர்களுக்கு எங்களின் இரண்டாம் ஆண்டு நெஞ்சார்ந்த கண்ணீர் அஞ்சலி











## மாவீரன் பகத் சிங் தூக்கிலிடப்பட்ட பிப்ரவரி 14 , 1931 இந்தியாவின் கருப்பு தினம்

இவன்

தேச நலன் காப்போர்

E-mail: editorseithikalavai@gmail.com

www.seithikalavai.com